# வீண் வேலை வேண்டாம் சம்பத்!


# அறப்போர்

ஆசிரியர்: அரங்கண்ணல்

தி.மு.க. வார வெளியீடு.

26-5-61 ] :-: ]விலை 16 காசு


## பனிமலை, பாலைவனமாகுமோ!

## குளிர் நிலா, கொள்ளியாகுமோ!!

புதுக் கட்சித் தோழரான சம்பத், கட்சி கண்ட நாள் முதலாய் தன்னுடைய கொள்கை மாற்றத்துக்கான காரணங்களைக் கூறுவதைவிட, அண்ணாவையும் தி.மு.க. வையும் இழித்தும் பழித்தும் பேசுவதையே இலட்சியமாகக் கொண்டிருக்கிறார்! பொது வாழ்வில், இருந்த கொள்கை பிடிக்காமல், இன்னொரு கொள்கையைத் தழுவுவது, அதிசயமல்ல.

ஆனால் அப்படி மாறும்போது, தான் மாறியதற்கான காரணங்

## பாழாக்காதீர் பொதுவாழ்வை!

களை மக்கள் மன்றத்திடம் கூற எவரும் கடமைப்பட்டவரே!! சம்பத். காரணங்களைக் கூறவில்லை; காய்ச்சலையே கொட்டுகிறார்.

திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டிருக்கும் தனியரசுக் கோட்பாடு, தீது—தி.மு.க. வலியுறுத்தும் சமதர்மவழி, கூடாது--ஏக இந்தியாவால்தான் நன்மைகள் ஏற்படும்—தமிழ்த் தேசியம் என்றால் என்ன தெரியுமா—என்பதற்கான விளக்கங்களை அவர் சொன்னால், அதைக் கேட்டு மக்கள் மன்றம் ஒப்புமானால்' நமக்கொன்றும் நட்டமில்லை! மக்கள் நல்ல முறையில் வாழ்வு பெற, எந்த வழியின் மூலம் இன்பம் ஏற்படினும், சரியே! ம. பொ. சி. காணாத புதுமையை, ஆதித்தன் சொல்லாத அரும் பொருளை, வேலூர் அண்ணல் தங்கோ தராத விளக்கங்களை, இந்தவிவேகி தருகிறாரா, இல்லையா என்று தீர்ப்பளிப்பது, மக்கள் வேலை!!

ஆனால், அவ்வழியினை விட்டு, அன்பர் சம்பத்தும், அவரது சகாக்களும், பாதைமாறிய நாள் முதற்கொண்டு, பேச்சிலும் எழுத்திலும், தமது கொள்கையை வலியுறுத்த--ஆதாரங்களைக் கொட்டுவதற்குப்பதில் அண்ணாவைத்தாக்குவதையும், திராவிட முன்னேற்றக்கழகத்தை இழித்துரைப்பதையுமே, வேலையாகக் கொண்டு அலைகின்றனர்- ஆதரிக்கும் அவர் தம் ஏடுகளை எடுத்தாலும், பேச்சாளர் தம் பேச்சினைக் கேட்டாலும், திராவிட முன்னேற்றக் கழகத்தை, ஏதோ ஒரு வாரகாலத்தில் பிய்த்து எறிந்து விடுவதாகக் 'காண்டிராக்ட்' பேசிக்கொண்டு கிளம்பியவர்கள் போலவே, எழுதுகின்றனர்; பேசுகின்றனர்.

திராவிட நாடு கொள்கை தீது, என்பதற்கான விளக்கங்களை. இந்த வீரர்கள் வழங்கட்டும்! அதைக் கேட்கும் மக்கள், தமது தீர்ப்பை அளிக்கட்டும்!!—அதை விட்டு விட்டு, "அண்ணாதுரை" என்றே அழைப்போம் எனகின்றனர், அதுவே என் எதிர்கால அரசியல் பொதுப்பணி என்று எழுதுகிறார், கவிஞர் கண்ணதாசன். பாண்டியன் பொறுப்பிலுள்ள ஒரு பத்திரிகை, அண்ணாவை, எப்படியெப்படி அசிங்கப் படுத்தலாமோ அப்படியெல்லாம் படம் போடுகிறது!!

அண்ணாவைத் தாக்குவது. அவரைப்பற்றி இழிவாகப் பேசுவது, ஆகியவைகளால் தமிழ் நாட்டுக்கு என்னலாபமோ?

அண்ணாவை இழித்துரைப்பது மட்டுமல்ல, அதற்கடுத்த படியாக "திராவிட முன்னேற்றக்கழகம் எப்படிப் பட்டது தெரியுமா" என்றும் விளக்கமுற்படுகிறார் தோழர் சம்பத். இது மடாதிபதியின் சீடகோடிகள் இருக்கின்ற இடமாம், இங்கே உள்ளவர்களுக்கே எது கொள்கையென்பது சரியாகத் தெரியாதாம், இங்கேயிருப்பவர்கள் ரௌடிகளாம்—போக்கிரிகளாம் பொல்லாதவர்களாம்— வன்செயலாளர்களாம். கழகத்தைப் பற்றி, சம்பத், தரும் கருத்து இது!

இப்படிப்பட்ட ரௌடித்தனத்தை வளர்ப்பது, நமது அண்ணாவாம்! அதை வலியுறுத்தவே. அண்ணா முன்னிலையில் தன் அலுவலகத்தின் மீது 'செருப்பு' வீசப்பட்டது என்கிறது, 'தென்றல்'!!

அண்ணாவின் அரசியல் நெறி பற்றி' இந்த வார ',ஆனந்த விகடன்" எழுதுகிறது இதெல்லாம் அவர் ஏற்காத ஒன்று" என்று. ஆனால், சம்பத்தும் கவிஞரும். அண்ணா அவர்களின் தலைமையில் இயங்கும கழகத் தோழர்களாகிய நாமெல்லாம் காலித்தனங்களையும் கண்றாவிச் சண்டைகளையும் வளர்ப்போம் என்கிற கருத்தினை நிலைநாட்டவே, முயலு

### வண்டு

கின்றனர்! சகலவித முயற்சிகளையும் செய்கின்றனர்!!

இப்படி அண்ணாவையும் கழகத்தையும் இழித்துரைப்பதுதவிர, புதுக்கட்சிக்கு ஆதரவு தேட வழியில்லையா? புனிதமான எண்ணம், நாட்டுப் பொது வாழ்வின் பாலிருந்தால், எடுத்துரைக்கட்டும் தனது கொள்கைகளை, திராவிட முன்னேற்றக் கழகத்தின், இந்தெந்தக்கொள்கைகள், 'ஒவ்வாது கூடாது, என்று விளக்கட்டும்!! இதானே, கொள்கை பிடிக்கவில்லை என்று கூறுகிறவர்கள், செய்யவேண்டிய முதல் காரியம்.

அதை விட்டு. "அண்ணாதுரை ஒரு பேய். அந்தப் பேயைச் சுற்றிச் சில நாய்கள்" என்று பேசுவதா, அரசியல்? திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு ரௌடிகள் கூடாரம், என்று வர்ணிப்பதா, அரசியல்? உண்மையில் கொள்கைபிடிக்காதவர்கள், அந்தக் கொள்கை பிடிக்காததற்கான காரணங்களை விளக்கவேண்டும்

ஆட்கள் பிடிக்கவில்லையென்றால், அதே "கொள்கைகளை விளக்க" கட்சியமைத்துக்கொள்ளவேண்டும்!! தனிக் கட்சியமைத்ததற்குச் சொன்ன காரணமோ, "புதுக்" கொள்கைகளைப் பரப்பப் போகிறோமென்று, ஆனால் பரப்ப முயற்சிப்பதோ, அண்ணாவை அண்ணாதுரையென்று சொல்லுங்கள்; கழகத்தைக் காலிகள் முகாம் என்று கருதுங்கள்—எனும் செய்திகளை!! ஏன் இந்த நிலை சம்பத்துக்கு? ஏன் இப்படிப்பட்ட வேகம் வரவேண்டும் அவருக்கு? இதான் முதல் காரியம் என்று செய்ய வேண்டிய அவசியம் என்ன?. ஏன் தெரியுமா! சித்தப்பாவின் சிந்தை அப்போது தான் குளிரும். பார்த்தாயா. நம் பயலை! வெளுத்துக் கட்டுகிறான் அண்ணாதுரையை. நம்மைவிட ஒரு படிமேலேபோயே ஏசுகிறான். நம்மை விட்டு அங்கே போயிருந்ததற்குப் பாவமன்னிப்பு கேட்கிறான். நாம் செய்யவேண்டிய வேலையை அவன் செய்ய வந்து விட்டான். அப்பா மகனே, வாடா! இந்தாடா பெட்டிச்சாவி! இந்தா 'விடுதலை'!" என்று அப்போது தானே, அய்யாமகிழ்வார்- அதற்காகத் தான் இந்த வேலையைத் தீவிரமாகச் செய்கிறார்—என்று, சிலர், சம்பத்தின் சண்டியர் போக்கு பற்றிக் கூறுகிறார்கள்! இன்னும் சிலர், "இப்படியெல்லாம் பேசினால் தானே மக்கள் மன்றத்தில், பொதுத்தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கிற இந்தச் சமயத்தில், தவறான எண்ணம் ஏற்படும். அப்படி ஏற்பட்டால், தி. மு, க. வினர் ஜெயிக்க, முடியாமற் போகுமல்லவா? அது தானே, காமராஜருக்கும் டில்லிக்கும் பிடிக்கும்!" என்றும் சொல்கிறார்கள் !! உண்மையில் சம்பத்தின் போக்கு, இப்படிப்பட்ட கருத்துக்களை, உறுதிப்படுத்துவதாகவே இருக்கிறது. அண்ணாவையும், தி. மு. க.வையும், "தான் இருந்த இடம்" என்பதால், எது

(2-ம் பக்கம் பார்க்க)

1-ம் பக்கத் தொடர்ச்சி

சொன்னாலும் இந்தச் சமயம் மக்கள் நம்புவார்கள் என்று,கொட்டுகிறார், வேகவேகமாகவே திட்டுகிறார், தீவிரமாக !!

“ஓய்! போதுமய்யா, உன் யோக்கியதை. மூடு வாயை; நீ இப்போதுதான் கண்டாயா, திராவிட நாடு தீது என்று, இத்தனை நாளுமில்லாமல். ஒரே ராத்திரியில் உன் மனம் மாற என்ன காரணம்?” என்று மக்கள் கேட்பார்களே! அதற்குச் சரியான காரணம் தரவேண்டுமே!! எனும் எண்ணத்தில், நம்மைத் திட்டியது போக மீந்த நேரத்தில், “நான் முன்பே சொன்னதுதான், தேர்தல் அறிக்கையில்கூட இதனால்தான் திராவிடநாடு என்பதை விட்டேன், புதிதாக இந்தக் கருத்து ஏற்படவில்லை. ரொம்ப நாளாகவே இருந்தது,” என்று பேசி வருகிறார், தோழர் சம்பத். ரொம்ப நாளாகவே,இப்படியொரு கருத்து இருந்ததாம்! அப்படியொரு கருத்து இருந்ததாலேயே, தேர்தல் பிரகடனத்தில் கூடத் திராவிடநாடு என்பதை விட்டாராம்!! இவரைத் தேர்தல் பிரகடனம் எழுதச் சொன்னது, நாம் செய்த தவறாக இருக்கலாம். “நமது சம்பத், தீட்டட்டும்” என்று நம்பியே இவரிடம் ஒப்படைத்தோம். அப்படி ஒப்படைத்த நமக்கு—இவரை நம்பிய நமக்கே—துரோகம் செய்திருக்கிறார், என்பதுதானே விளங்குகிறது, இதன் மூலம்! உண்மையில், தேர்தல் அறிக்கையில் தீட்டாமல் விட்டிருக்கலாம் அவர் — ஆனால், விலகுவதற்கு முன்னாள்வரை பேசிய கூட்டங்களில் இந்த வீராதி வீரர், திராவிட நாட்டுக்கான ஆதாரங்களைப் பேசாமலிருந்தாரா? திராவிடநாடு என்கிற வார்த்தையை உச்சரிக்காமலிருந்தாரா? அப்படி யிருந்திருந்தால், சரி, சம்பத்து நீண்ட காலமாகவே திராவிட நாடு பிடிக்காததால், அதைப்பற்றி ஒரு வார்த்தைகூடச் சொல்லாமல், இருந்து வந்தது இதனால்தான் போலும் என்று எண்ணலாம். இல்லையே! வில நவதற்கு முதல் நாள் இவர் கலந்து கொண்ட நிகழ்ச்சியே, “தி.மு-க. வரலாறு” வெளியீட்டு விழா! அங்கு பேசிய பேச்சும், திராவிட நாடு பெறுவதற்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்பது பற்றித்தானே!! அண்ணாவிடம் சொன்னாராம்— பொறுடா, தம்பி! பொறுத்துச் சொல்வோம்—என்று, அண்ணாவும், திராவிடநாடு இலட்சியத்தை மாற்றுவது பற்றி இவரிடம் சொன்னாராம். அண்ணா இவரிடம் சொல்லி யிருந்ததாகவே இருக்கட்டும் — யோக்கியமான அரசியல்வாதி யென்றால் ஒவ்வொரு பொதுக் குழு உறுப்பினருக்கும் “லெட்டர்” போட்டாரே, அதில் ஏன் இதைப்பற்றிக் குறிப்பிடவில்லை? ஒவ்வொரு பொதுக் குழுவிலும் சண்டமாருதமெனப் பேசுவாரே. அங்கே ஏன் இதனைப் பிரச்னையாக்கி யிருக்கக் கூடாது? அது கூட வேண்டாம், தன்னைப் பொறுத்த- அளவிலாவது திராவிட நாடு பற்றி ஏன் பேசாமல் இருந்திருக்ககூடாது? அதுகூட வேண்டாம், தன்னுடன் பழகும் நண்பர்களிடமாவது ‘அண்ணா இப்படிச் சொன்னார். அதிகம் திராவிட நாட்டைப்பற்றிப் பேசவேண்டாம் என்று ஏன் சொல்லியிருக்கக்கூடாது? அதுகூட வேண்டாம், அவருடன் ஈராண்டு காலமாக ‘எல்லா விஷயங்களுக்கும்’ பயன்படுகிற உத்தம நண்பராய் விளங்கிய கவிஞர் கண்ணதாசனிடம், ‘கண்ணா! இன்பத் திராவிடப் பொன்னாடே, அச்சம் என்பது மடமையடா — அஞ்சாமை திராவிடர் உரிமையடா’ என்றெல்லாம் எழுதாதே. ஏனென்றால் திராவிடப் பொன்னாடு த்ராவிடர் என்பதையே நாம் மாற்றப் போகிறோம்” என ஏன் சொல்லி யிருக்கக் கூடாது? ஏன் செய்யவில்லை! ஏன் சொல்லவில்லை!! இப்போது சொல்கிறார், திராவிடநாட்டுக் கொள்கையில் தனக்கும் நம்பிக்கை யில்லை யென்று அண்ணா, வினோபா அடிகளிடமகூட ஒப்புக் கொண்டாராம். ‘இல்லையில்லை! லோகியாவிடம்கூட அண்ணா இப்படித்தான் சொன்னார்’ என்கிறார், தோழர் சின்னச்சாமி, என்பவர். சின்னச்சாமியின் சொந்த ஊர் ஈரோடு என்பதும், அவர் சம்பத்தின் நண்பர் என்பதும், நாட்டுக்கு வேண்டுமானால் தெரிய நாளாகுமே ஒழிய நமக்கெல்லாம் தெரியாதா!! அண்ணா வினோபா அடிகளிடம் ஒப்புக்கொண்டாராம் —இதை நாம் நம்பவேண்டுமாம், நாடும் நம்பவேண்டுமாம்! அப்படி அண்ணா ஒப்புக்கொண்டிருந்தால் அதையே காரணமாகக் காட்டி (அப்போது முதல்தான்—நீண்ட நாளாகவே—திராவிட நாடு பற்றிச் சந்தேகம் இருந்திருக்கிறதே இவருக்கு!) ஏன், விலகியிருக்கக் கூடாது? ‘என்னண்ணா பொது மேடையிலும் மாநாட்டிலும் திராவிடநாடு வேண்டுமெனச் சொல்லும் நீங்கள், வினோபாவிடம் இப்படிச் சொன்னீர்களாமே. இது தவறு’ என்று ஏன், உரிமைப் பிரச்னை, எழுப்பியிருக்கக் கூடாது? அப்படிச் செய்வதுதானே ஒரு அரசியல்வாதியின் நேர்மை! ஏன், அன்றைய தினம் செய்யவில்லை சம்பத்! அப்போது இந்தி எதிர்ப்பு மாநாடு நடத்தவில்லை என்பதாலா? அந்தப் பணம் கைக்கு வரட்டும் என்பதற்காகக் காத்திருந்தாரா? என்ன காரணம்! என்ன காரணம்!!

* * * *

நேர்மையாகப் பேசட்டும்— கொள்கைகளைச் சொல்லட்டும்— அது, அரசியல் நாகரீகம், அதைவிட்டு, அண்ணாவைத் தாக்கவும், தி.மு.க. வை ஏசவுமே, ஒரு கட்சியென்றால், தன்னுடைய சுயநல லாபங்களையும், ஆசாபாசங்களையும் நிறைவேற்றிக் கொள்ளவா, பொது வாழ்வு? அண்ணாவையும் தி.மு.க. வையும் அழிக்கவேண்டியது இவர் இலட்சியமா? அல்லது தமிழ்த்தேசீயத்தைப் பரப்புவது இவர் இலட்சியமா? எது, இவர் இலட்சியம்! தமிழ்த் தேசியத்தை பரப்புவதென்றால், அதைப்பேசட்டும்! அதை விட்டு, தி. மு. க. வைப்பற்றி, இல்லாததையும் பொல்லாததையும்— இழித்தும் பழித்தும்—கேவலமாகவும் அற்பனைப் போலவும் — சந்துமுனைச் சண்டியராகவும்--சாமுண்டி உபாசகனைப் போலவும் — பேசுவானேன்? இதுதான் அரசியலா! இதுதான் கண்ணியமா! இதுதான் யோக்கியமா! இதுதான், பொதுப்பணியா!!

இப்படி அநாகரீகத்தையும், ஆபாசமுறையையும், இட்டுக் கட்டிச் சொல்வதையும், தமிழ்நாட்டுமக்களே, நீங்களே கேட்டு, நல்ல தீர்ப்புக் கொடுங்கள், அண்ணா, ரௌடித்தனத்தை விரும்புகிறவரா? அண்ணாவா,தன் வாயால், திராவிட நாடு வேண்டாம் என்றிருப்பார்? அண்ணாவா கண்ணதாசன் அலுவலகத்தின் மீது “செருப்பு” போடச் சொல்லியிருப்பார்? இவையெல்லாவற்றையும் விடக் கொடுமையென்ன தெரியுமா! மேயர் முனுசாமியை வழியனுப்பப் போன இடத்தில், சம்பத்தின் ஆட்களிடம் யாரோ தகராறு செய்தார்களாம், (அப்படித் தகராறு செய்தவர்களைப் போலீசில் பிடித்துக் கொடுக்கட்டும். நமக்கு ஆட்சேபணையில்லை) அதற்குக் காரணம் நமது அரும் பெருந்தலைவர் அண்ணாவும், நாவலரும், கருணாநிதியும் அப்படிச் சொல்லி, வழக்கும் போட்டிருக்கிறார்களாம், புதுக் கட்சியினர், ஆட்களை வைத்து இதையெல்லாம் செய்யச் சொன்னதாக!! ஏன்,,திகைக்கிறீர்கள்? உண்மைதான், தோழர்களே, அண்ணாவின் மீதுதான், இப்படியொரு வழக்கு! ஆச்சரியப்படாதீர்கள், அவ்வளவு தூரம், சம்பத்தின் மனதை, எரிச்சல் துளைக்கிறது— சித்தப்பாவிடம் ‘சபாஷ்’ பட்டம் பெறும் ஆசை துடிக்கிறது— “அந்தோ! பொதுவாழ்வே!! உன்னைக் கொண்டு ஊனைப் பெருக்கவும், மாடிவீடுகளைப் பெருக்கவும் சுயநலத்தை வளர்க்கவுமான கொடுமைகளை, எத்தனை நாளைக்குத்தான் தாங்கப் போகிறாயோ?” என்று, பெருமூச்சு விடுவோம்! நம் வேலையைச் செய்வோம்— நம்பிக்கையுடன் — நன்னெறியுடன்! காலம், பாடம்புகட்டும், கயமைக்கு—பொய்காணும் வாயினருக்கு! பொல்லாத பூர்ஷ்வாககளுக்கு!!

—0—

‘பாவி மன்னிப்பு’

*தொடர் கட்டுரை*

அடுத்த இதழில்!!


முதல் இதழ் விற்பனையாகிறது!

இரண்டாவது சுவை ஏடு தயாராகிறது!

‘அருவி’

திங்கள் ஈரிதழ்

ஆசிரியர்: புலவர் பொன்னிவளவன்

பொறுப்பாசிரியர்: கடலூர் முரசழகன்

தனி இதழ் : 16 காசு — ஆண்டுச்சந்தா ரூ. 4-00

தமிழ் கொஞ்சும்! இது கண்டு பகை அஞ்சும்!
நமக்கு இது ஒரு அருவி! நாச மதி படைத்தவரை
நசுக்குகின்ற புதுக் கருவி!

விபரங்களுக்கு,
நிர்வாகி
‘அருவி’ அலுவலகம், திருப்பாதிரிப்புலியூர். (தெ. ஆ. மா)


(7-ம் பக்கத்தொடர்ச்சி)

டமிட்டு, ஒரு குட்டி நடிகனை ஓட்டலுக்கு அழைத்துக்கொண்டு போய் நைசாக விபரம் விசாரித்தான். கிடைத்த பதிலோ, “அருணாவா?” அப்படியொரு பெண்ணும் எங்கள் கம்பெனியில் இல்லையே!” என்பதுதான். எப்படி யில்லாமலிருப்பாள், இதோ அவள் எழுதிய கடிதம் இருக்கிறதே, என்று சொன்னால் விஷயம் கெட்டு விடும் என்பதால், அதற்குமேல் எந்த விபரமும் விசாரிக்கவில்லை, கமலா. ஆனால், ஜானகியிடம் இந்த உண்மையைச் சொல்ல முடியுமா? கற்பனைக்குதிரைகளைப் பூட்டிவிட்டு, ‘ஆகா ஜானகி’ அவள், அவ்வளவு பெரிய அழகியாம். அவளைப் பார்ப்பதென்றால் யாராலும் முடியாதாம். எந்த ஆளையும்ஏறெடுத்தும் பாராளாம ஏதோ, சினிமாவில் நடிக்கக்கூட ஒரு சான்சு வந்திருக்கிறதாம்—’ என்று இப்படி அளந்துவிட்டான், கேட்கக் கேட்க ஜானகிக்கு ஏதோ, ஆகாயத்தில் மிதப்பது போலிருந்தது! சீக்கிரம் அந்தச் சிந்தாமணியைச் சந்திக்க வேண்டும் — இப்பொழுதே எழுதிப் போடடா என்று வற்புறுத்தினான் ஜானகி! இன்னொரு கடிதமும் பறந்தது.

* * *

‘அருணா’ வின் அறையில், அந்தக் கடிதத்தை கதாசிரியர் பண்டிட் படிக்க, பல நடிகர்கள் உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருந்தார்கள். அருணாவுக்கு யோகம் என்றான் ராஜபார்ட் பாண்டியன்! அடித்தாலும் இப்படியல்லவா அடிக்க வேண்டும் என்றான், தழை! (சீட்டாட்டத்தின காரணமாக ஏற்பட்ட பெயர் இது) ஆனந்தத்தை சீட்டியடித்து அனுபவித்தான், அருணா என்ற பெயருக்கு உரிய அருணாசலம்!! ‘என்ன, பெண்ணல்லவா? ஆண்தானா” என்று நீங்கள் ஆச்சரியப்பட்டுக் கேட்பது, புரிகிறது, ஆமாம்! கமலாவும் ஜானகியும் கற்பனையிலே மிதந்து கொண்டிருந்த அருணா, பெண்ணல்ல, ஆண்தான்!!

(அடுத்த இதழில்)

# 60,00,000 பேர்களைக் கொன்ற காதகன்!

[சென்ற இதழ் தொடர்ச்சி]

'வீழப்போவது நிச்சயம்' என்கிற அறிகுறி தெரிய ஆரம்பித்ததும், ஹிட்லருடைய நண்பர்கள் என்ன செய்வது என்பது பற்றி யோசிக்கலாயினர். தங்கள் வசமிருந்த பணங்களையும் சொத்துக்களையும் நடுநிலைமை நாடுகளிலிருந்த பாங்கிகளுக்கு அனுப்பிப் பாதுகாப்புத் தேடலாயினர். அந்த நாடுகளுக்கு ஓடிப்போய் விடலாம் என்றும் எண்ணலாயினர். ஹிட்லர் மட்டும் பிடிவாதமாகக் கடைசிவரையில் பெர்லினிலேயே இருந்தான், தன் காதலி ஈவாவுடன்! அவனுடைய முடிவும் பெர்லினிலேயே ஏற்பட்டிருக்க வேண்டுமென்றே கருதப்படுகிறது!!

ஸ்விட்சர்லாந்து, தென் அமெரிக்காவின் மேலக் கோடியிலுள்ள அர்ஜன்டைனா முதலிய நாடுகள் நடுநிலைமை நாடுகளாகக் கருதப்பட்டன. ஹிட்லருடைய பல தளபதிகள், கோடிக்கணக்கான பொன்களை, இந்நாடுகளில் கொண்டுசேர்க்க முயன்றனர். ஜெர்மனியிலிருந்த பாங்கிகள் மூலம் அந்தந்த நாட்டுப் பாங்கிகளுக்கு இந்தச் சொத்துக்கள் கைமாற்றப்பட்டன. ஹிட்லர் வசமும் தனிப்பட்ட முறையில், ஏராளமான சொத்துக்கள் அணிமணிகள் இருந்தன. இவை பெர்லினிலேயே புதைக்கப்பட்டனவா ஸ்விட்ஜர்லாந்தில் இனம் தெரியாமல் போய்விட்டதா என்பது இன்னும் புதிராகவே யிருக்கிறது. ஹிட்லரின் தளபதிகளுக்கும் முக்கிய தலைவர்களுக்கும அப்போது 'மோட்ச லோகம்' போல இருந்தது, அர்ஜன்டைனாதான்! அங்கேதான், தமக்கெல்லாம் பாதுகாப்பு கிடைக்கும் என்று, தோல்வி கண்டு கொண்டிருந்தவர்கள், எண்ணினார்கள். எதிரியின் கையில் அகப்பட்டால் சாவு நிச்சயம். முடிவு கண்முன் தெரியும்போது, ஜெர்மனியை விட்டுத் தப்பி, அங்கே ஓடிவிடுவதென்பது அவர்கள் திட்டம். பலர் முன்கூட்டியே, தத்தம் மனைவி மக்களையெல்லாம் அங்கே அனுப்பி வைத்திருந்தனர். பணக்கார வியாபாரிகளும், முதலாளிகளும் ஜெர்மனியின் வீழ்ச்சி தெளிவாகக் கண்டதும் அர்ஜன்டைனாவில் போய்ச் சேரலாயினர்!

அப்போது அர்ஜன்டைனாவில், பிரான் என்பான் சர்வாதிகாரியாயிருந்தான். ஹிட்லர், இவனுடைய இலட்சிய உருவம். இவனுக்கு, ஹிட்லர், பல வெகுமதிகளையும், உயர்ந்த கார்போன்ற உல்லாசப் பொருள்களையும் பரிசளித்ததுண்டு. ஒருமுறை, அந்தப் பிரான் சொன்னானும், 'அமெரிக்கா எனக்குத் தருவதென்ன? ஆசை வார்த்தைகள்தான்! ஆனால், ஹிட்லர், அளித்துள்ளவை, வெகுமதிகள்'', என்பதாக. பிரானுக்கு இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக்கொள்ள வேண்டும் என்கிற ஆசை எழுந்தது. ஜெர்மானியிலிருந்து வரும் பிரபுக்களை வரவேற்றான். அவர்கள் 'முதல்' போட்டு, பல தொழிற்சாலைகளை துவங்குவதை, மனமார ஏற்றான். ஈ. வெ. கி. சம்பத், இப்போது சொல்கிறாரல்லவா? வட நாட்டு முதலாளிகள் இங்கே வந்து தொழிற்சாலைகளை ஆரம்பிப்பது எனக்குச் சம்மதம்; அப்போதுதான், பல ஆலைகள் இங்கே பெருக்க முடியும்—என்று பிரானும், தன் 'சுயநலத்தை' மறைக்க, ஜெர்மானியப் பிரபுக்கள் வருவதற்கு ''தேசீயக் கலர்'' கொடுத்தான்! தேசம் முன்னேற தொழில்கள் வேண்டும்—அதற்கு ஜெர்மானிய முதலீட்டைப் பயன்படுத்துகிறேன் — ஆலைகளை அமைக்கவும் நிர்வகிக்கவும் ஜெர்மானியர்கள் நல்லவர்கள் என்பதால், அவர்களை வரவேற்கிறேன் என்றான். இதற்கென்று, அவன் ''பெற்றது'' ஏராளம்! பிரான் என்பவன், தன் காதலியான ஈவாவுடன் (ஹிட்லர் காதலியின் பெயரும் இவன் காதலியின் பெயரும் ஒன்றே!) வாழ்ந்த வாழ்வும், நடத்திய அட்டகாசமும், பிரசித்தமானவை. இதே பிரான், அர்ஜன்டைனாவில் கவிழ்க்கப்பட்டான். அப்போது அவன் நடத்திய கோலாகல வாழ்க்கையைப்பற்றி ஏராளமான தகவல்கள் வெளிவந்தன. இரண்டாம் உலகப்போர் நடந்தபொழுது, ஜெர்மானிய ஒற்றர்கள், அர்ஜன்டைனாவிலிருந்து அமெரிக்கா பற்றிய இரகசியத் தகவல்களைச் சேகரித்து ஹிட்லருக்கு அனுப்பிக்கொண்டிருந்தார்களாம். அர்ஜன்டைனா, தென் அமெரிக்காவிலிருப்பது! நடுநிலைமை நாடெனப் பிரகடனம் செய்து கொண்டிருந்த, நாடு!!— எனவே, அமெரிக்க வல்லரசுகள் தன்னுடைய அதிருப்தியைத் தெரிவிக்க முடிந்ததே ஒழிய, வேறென்ன செய்யமுடியும்? சிலி பிரேசில், பொலிவியா முதலிய நாடுகளும், அர்ஜென்டைனாவை ஒட்டியுள்ளவை! இங்கும் ஹிட்லருடைய ஏஜண்டுகள், ஏராளமாகயிருந்தனராம்! சப்மரீன்கள் மூலமாக, அர்ஜென்டைனாவுக்குள் ஜெர்மானியப் பணம், மூட்டை மூட்டையாகக் கொண்டுவரப்பட்டன. அர்ஜென்டைனாவி லிருந்த ஜெர்மானிய தூதுவராலயத்திற்கு இரண்டு லட்சம் டாலர்கள் அனுப்பப்பட்டு, அங்கேயிருந்த படாகானியா எனும் ஊர் விலை பேசி வாங்கப்பட்டதாம். ஹிட்லர் தோற்றுவிட்டால்; ஜெர்மனிய இராணுவத்தினர் மீண்டும் ஒரு படையெடுப்புக்கு, இங்கேயிருந்து எல்லா ஏற்பாடுகளையும் செய்வதென்று, ஹிட்லர் முடிவு செய்திருந்தானாம். போர் முடிந்த பிறகு நேச நாடுகள், மேற்கு ஜெர்மனியின் உதவியுடன், போன தொகைகளைப் பற்றி துப்பு அறிந்து, கண்டுபிடித்தன. 1945 ஜனவரி 22-ந் தேதி தோல்வி மேல் தோல்வி கண்டுகொண்டிருந்த சமயம், ஹிம்ளர் நாஜி அதிகாரிகளில் 340 பேரை டிஸ்மிஸ் செய்து, அர்ஜென்டைனாவுக்குப் போய்ப் பிழைத்துக் கொள்ளச் செய்தான்! ஹிட்லர் தொலைந்த ஆறுவார காலத்துக்கெல்லாம் நாஜிப் படைகளின் நீர்மூழ்கிக் கப்பல்கள், அர்ஜென்டைனாவுக்குப் போய் அடைக்கலம் பெற்றன. ஹிட்லர்கூட இப்படியொரு 'சப்மரீன்' மூலம், அர்ஜென்டைனாவுக்குப் போய்விட்டான் என்கிற வதந்தி, பலகாலம் இருந்தது! இந்த சப்மரீன்கள் மூலம், பல ஜெர்மானியர்கள், இங்கே தஞ்சம் பெற்றனர்!! இதையெல்லாம், அர்ஜெனடைனாவிலிருந்த அமெரிக்கத் தூதுவராலயம், அறியாமலில்லை. என்ன செய்ய முடியும்? நடுநிலைமை நாடாயிற்றே! அப்போது அங்கே இருந்த அமெரிக்கத் தூதர் பிரேடன், பிரானுடைய சர்க்கார் மட்டும் எங்களுக்கு ஒத்துழைப்புத் தந்திருந்தால், நாஜித் தலைவர்களையெல்லாம் வெகு சுலபமாகப் பிடித்திருக்க முடியும்...ஹிட்லருடைய சொத்துக்கள் பலவும் அங்கே கிடைத்திருக்க முடியும்'' என்று எழுதியிருக்கிறார். பிரேசில் நாட்டில் இன்றைய தினம் கடலில் படகுகளும் விமானங்களும் விட்டுப் பிழைக்கும் கம்பெனியொன்றை நடத்திக் கொண்டு பெரிய பிரபுவாக சுகூர்ஸ் என்பானிருக்கிறான்! இவன் ஒரு ஜெர்மானிய தளகர்த்தன். ஈச்மேனுக்குக் கீழே யிருந்தவன். இவன் மட்டும் 32000 யூதர்களைக் கொன்றவனாம்!! இவனைப்போன்ற பலர், இன்னும், ஆங்காங்கே யிருந்து கொண்டுள்ளனர். பழைய தீமைகளை மறக்கடிக்க-இவர்கள், ஆங்காங்கும் ''வள்ளல்'' கள் என்று போற்றப்படுகிற அளவுக்குத், தயாள சிந்தையுடன், பெயர் பெற்று விளங்குகிறார்களாம்!!!

* * *

இப்படித் தப்பியவர்களைப் போலத்தான், ஈச்மேனும், தப்பினான். ஆனால், இரத்தக் கறை படிந்த இவன் பெயரை உலகம் எப்படி மறக்கும். உலகம் மறந்தாலும், இஸ்ரேல் எப்படி மறக்கும்- பதினைந்து ஆண்டுகள், இவன் எங்கே யிருக்கிறான் என்பதை அறிய, பெருமுயற்சிகள் மிகமிக இரகசியமாக நடைபெறலாயின. இஸ்ரேல் அரசினுடைய இரகசிய துப்பறியும் நிபுணர்கள் மாறு வேடங்களில், ஸ்விட்ஜர்லாந்து, அர்ஜென்டைனா, பிரேசில், சிலி முதலிய நாடுகளில் வட்டமிட்டுக் கொண்டே யிருந்தனர். கடைசியில், அவனைப் பிடித்தனர். அவனைப் பிடித்தது மிகமிக ரசமானதாகும்.

ஈச்மேன் எப்படித் தப்பினான்? போர் முடிந்து, ஆஸ்திரிய மலையோரம் இருந்தவன் எதிரிகளிடமிருந்து எப்படித் தப்பினான்? இதோ, அதை அவனே, கூறுகிறான்.

''ஆஸ்திரியாவின் ஓரமிருந்த நேசப்படைகளின் வசம் நானே சிக்கினேன்! ஈச்மேனைத் தேடிக் கொண்டிருந்தார்கள் என்பது எனக்குத் தெரியும். எந்த ஜெர்மானியக் கைதியைப் பார்த்தாலும், அமெரிக்க அதிகாரிகள் இந்தக் கேள்வியைத்தான் கேட்டுக் கொண்டிருந்தனர். என்னையும்கூட ஒரு அதிகாரி, ''ஏய்! எங்கே ஈச்மேன்?'' என்று கேட்டார். எனக்கு உருமாற்றிக் கொள்ள ஓரளவுக்குத் தெரியும். இதனால், நான் ஈச்மேன் உருவை மாற்றிக் கொண்டே, அங்கே யிருந்தேன். என்னை அந்த அதி


## மணமகள் தேவை

மத்திய அரசினர் பணிமனையில் வேலை செய்யும் நல்ல ஊதியம் பெறும் 28—வயதுடைய தோழர் ஒருவருக்கு, மணம் செய்து கொள்ள நல்ல குணமும், அழகும் நன் நடத்தையுமுள்ள, தி. மு. கழகத்தில் நீங்கா பற்றுடைய மணமகள் தேவை. 18 லிருந்து 22 வயதிற்குள் இருப்பது நலம். மதுரையில் நடக்கவிருக்கும் மாநில மாநாட்டின் கடைசி நாளன்று மேடையிலேயே அறிஞர் அண்ணாவின் முன்னிலையில் திருமணம் செய்துக் கொள்ளத் தயாராக உள்ளவர்கள் மட்டுமே எழுதவும். விரும்புவோர் புகைப் படத்துடன் கீழ்க்காணும் முகவரிக்கு விண்ணப்பிக்க.

எம். ஆர்.
பி. கோபாலசாமி
க்யூ. எம். டி. பள்ளி
கர்க்கி. பூனா-3

வி—ம்

(3-ம் பக்க தொடர்ச்சி)


காரி இக்கேள்வியைக் கேட்டதும், கொஞ்சங்கூட சளைக்காமல், 'தெரியாது சார்! என் பெயர் பர்த்—நான் ஒரு சிறு தளகர்த்தன்' என்று பதிலளித்தேன். நான் பதிலளித்த அந்த முறையைக் கண்டே, அவர் என்மீது சந்தேகப்படாமலிருந்திருக்க வேண்டும். என்னை போர்க் கைதிகளின் சிறையிலிருக்கவைத்தார்கள். என்னைத் திடீர் திடீரெனக் கேள்விகள் கேட்டால் உடனே சொல்ல, எதுவும் கவனம் வேண்டுமல்லவா? அதனால், என் பிறந்த தேதியை ஓராண்டு முன்னதாகத் தள்ளிவைத்துக்கொண்டேன்- நினைவு இருக்க வேண்டுமென்பதற்காக மார்ச் 19, 1905 என்றே சொன்னேன். என்னை அந்தச் சிறையிலிருந்து 'வெய்டன்' எனுமிடத்திற்கு அனுப்பினார்கள்! அங்கே, தற்செயலாக என் முன்னாள் உதவியாளனை தளபதி ஜேனிச்சைச் சந்தித்தேன் எங்கே அவன் காட்டிக்கொடுத்து விடுவானோ என்கிற அச்சம் எனக்குப் பிறந்தது. யாரை நம்ப முடியும் இந்தச் சமயத்தில்? அதனால், நானே வலுவில் சென்று ஓபர்டெக்ஸ்டன் எனுமிடத்துக்குப் போகச் சம்மதித்தேன். இது 1945, ஆகஸ்டில். 1946 ஜனவரி வரையில் அங்கேயே இருந்தேன்.

இந்தச் சமயங்களில், எங்களைப் பலமுறை அதிகாரிகள் விசாரிப்பார்கள். இப்படி விசாரித்து விசாரித்து உண்மைகளைத் தெரிந்து கொள்வதில், கெட்டிக்காரர்களுமாக இருந்தார்கள். இதனால், நாம் அகப்பட்டு விடுவோமோ என்கிற பயம் எனக்கு ஏற்படலாயிற்று. எப்படியாவது இங்கேயிருந்து தப்பிவிட வேண்டுமென எண்ணினேன். நல்ல வேளையாக ஒரு ஜெர்மானியக் கைதி, என்னை அடையாளங் கண்டு கொண்டது மட்டுமின்றி நான் கைதியாக இருந்து அடையும் அவதி கண்டு கண் கலங்கினான். என்னைத் தப்புவிப்பதற்கான எல்லா உதவிகளையும் செய்தான். நான் அங்கிருந்து தப்பினேன்!!''

எதிரிகள் கூடாரத்திலிருந்தும் அவர்கள் யாரும் கண்டுபிடிக்க முடியாதபடி அங்கேயே வாழ்ந்து அவர்கள் யாருக்கும் தெரியாமல் அந்த இடத்தை விட்டும் தப்பினான் ஈச்மேன். எத்தகைய சாகசமும் சாமர்த்தியமும் இருந்திருக்கவேண்டும், இந்தச் சண்டாளனுக்கு.

* * * *

அர்ஜன்டைனாவின் தலைநகரம் போனாஸ் அயர்ஸ் என்பதாகும். அந்நகரத்தின் வீதிகளில் ஒன்றில் நீண்ட உடலும், பலம் நிறைந்த தோற்றமும் கொஞ்சம் நீளமான காதுகளையும் கொண்ட ஒரு மனிதன் ''பஸ்'' ஸிலிருந்து இறங்கி, நடக்கலானான்! அவனுடைய உடைகளோ, அவனை ஒரு தொழிலாளியென்று சொல்லின!! பகல் முழுதும் உழைத்து விட்டு, எல்லோரையும் போல, மாலையில் வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தான். ஆனால், அவன் கண்கள் மட்டும் துருதுருவென்று இப்படியும் அப்படியும் அலைமோதிக் கொண்டிருந்தன.



வீதியில், அவன் சந்தேகப்பட வேண்டிய அளவுக்கு எதுவுமில்லை ஒரு வீட்டின் முன்னே, இரண்டு பெண்மணிகள் மட்டும் நின்றபடி பேசிக்கொண்டிருந்தார்கள். அதற்கும் அப்பால், இரண்டு தொழிலாளர்கள், சிகரெட் கொளுத்திக் கொண்டிருந்தார்கள் ஒரு கருப்புக்காரர், அந்தத் தெருவுக்குள் வேறொரு தெருவிலிருந்து திரும்பியது. 'நீளக்காதன்'' அக்கார் தன்னை நோக்கி வருவதைக் கண்டான். சலனம் கொண்டு துருதுருவென்றலையும் அவன் கண்கள், வேகமாக வரும் அந்தக் காரைக் கண்டு யோசிப்பதற்குள் 'தடார்' என்கிற பிரேக் சப்தம் கேட்டது. கார் நின்றது. கதவைத் திறந்து கொண்டு நான்கு பேர் குதித்தார்கள். அதைக் கண்ட அவன் ஓடமுயன்றான். நான்கு பேரும் வளைத்துக்கொண்டார்கள் 'ஐயோ!' என்று அலற முயன்றான்! ஓங்கி, ஒரு அடி விழுந்தது, தலையில்! மயங்கி வீழ்ந்தான்! பலசாலிகளானநால்வரும், அவனைத் தூக்கிக் காரில் போட்டனர்! நால்வரும் ஏறி உட்கார்ந்தனர்! கார் பறந்தது!! பதினைந்தாண்டு கால முயற்சி பலித்தது—பெரிய மனித வேட்டை முடிந்தது—'உலகத்தின் முதல் நம்பர் கொலைகாரன்' பிடிபட்டான்—எந்த மக்களை மிருகங்களாக நினைத்துக் கொன்று குவித்தானோ, அதே மக்களால், வீதியில் கண்டுபிடிக்கப்பட்டு, காரில் போட்டு இழுத்துச் செல்லப்பட்டான். என்னுடைய வேலை மட்டும் முடிந்தால். ஐரோப்பாவில் யூதர்களே இருக்கமாட்டார்கள்''—என்று ஓங்காரக்கூச்சலிட்ட உன்மத்தன், ஈச்மென்னை, யூத இரகசிய ஒற்றர்கள் பிடித்துவிட்டார்கள்.

ஐரோப்பாவில், அமெரிக்கத் துருப்புகள் வசமிருந்து தப்பிய ஈச்மென், இந்தப் பதினைந்தாண்டுக் காலமும் எங்கேயிருந்தான், எப்படித்தப்பினான் என்று கேட்பீர்கள். அமெரிக்கர் வசம் கைதியாகயிருந்த போது, இறந்து போன ஒரு மனிதனுடைய ''பாஸ் போர்ட்டுகளை'' ப் பத்திரமாக எடுத்து வைத்துக் கொண்டான்! முன்பு குறிப்பிட்ட அந்த ஜெர்மானிய வீரன்தான், இந்தப் பாஸ் போர்ட்டையும் கொண்டுவந்து கொடுத்தானாம்!! அதை வைத்துக் கொண்டு, ஒவ்வொரு நாடாகக் கடந்து, தென் அமெரிக்காவிலுள்ள அர்ஜன்டைனாவுக்குப் போய்ச் சேர்ந்து விட்டான். அவன் எப்படி அவ்வளவு தூரம் போனான் - ஏதுபணம் - என்கிற விபரம் இன்னும் புரியாத புதிராக உள்ளது.

ஈச்மென் வளர்ந்தது ஆஸ்டிரியாவாகும்! போரின் முடிவின் போது,

(9-ம் பக்கம் பார்க்க)


# இலக்கியக் கனிகள்

*—*

வழக்கறிஞர்: தில்லை வில்லாளன் தீட்டிய

**பட்டமரம்** ரூ 1-50
**திரை** ரூ 1-00
**மழலைச்செல்வம்** (அச்சில்)

சென்னையில் கிடைக்குமிடம்:—

பாரி நிலையம்,
பிராட்வே, சென்னை-1

விபரங்கட்கு,

தம்பி வெளியீடுகள்,
சிதம்பரம்.


# எதிரொலி

சேலம் உருக்காலை எப்பொழுது உருவாகும்?

—தினமணி

ஃ உருக்காலையாவது, கரும்பாலையாவது அந்தத் திட்டம் உருகி ஓடி எத்தனையோ நாட்களாகின்றனவே!

*

பச்சைத் தேங்காயிலிருந்து நேரடியாக எண்ணெய் எடுக்கப்படும்!

—கேரளச் செய்தி.

ஃ கல்லிலிருந்து நாரையும் உரிக்கலாம்! பச்சைத் தேங்காயிலிருந்து நேரடியாக எண்ணெயும் எடுக்கலாம். ஆனால், இந்தப் 'பச்சைத்' தமிழர் ஆட்சியிலிருந்து நேரடியாக உரிமையோடு கூடிய எந்தஒரு பலனும் நமக்குக் கிடைக்காது என்பது மட்டும் திண்ணம்!

*

கடந்த தேர்தலில் இழந்த இடங்களை மீண்டும் பிடிப்பது எப்படி?

—காங்கிரசின் ஆலோசனை.

ஃ பிறகென்ன, சீனுக்காரனிடம் இழந்த இடங்களை மீண்டும் பிடிப்பது எப்படி என்பதிலா 'அவர்கள்' ஆலோசனை செய்யப்போகின்றனர்?

*

உலகிலேயே குறைந்த அளவு உணவு உண்ணுபவர்கள் இந்தியர்களே!

—தமிழ் நாடு.

ஃ அந்தப் 'பெருமையை'த் தேடிதரத்தானே பதின்மூன்றாண்டுகளாகக் காங்கிரஸ்காரர்கள் பதவியில் வீற்றிருக்கின்றனர்!

*

நான் முழக்கிய திராவிடப் பிரிவினை கற்பனையே!

கண்ணதாசன்

ஃ கவிஞரே! இனியேனும் நீர் முழங்கும் முழக்கத்தை, 'கற்பனையில் எழுந்த கவிதை' யோ என தமிழ் மகன் ஒருவன் நினைக்காமலிருக்க நீர் தரும் உறுதி என்ன?

*

கிராமிய நடனங்களின் தரம் இன்னமும் குறையவில்லை!

—பக்தவச்சலம்

ஃ அதனால்தானா, 'இவர்கள்' இன்னமும் அந்தக் 'காவடி தூக்கும்' கிராமிய நடனத்தை மறக்காமல் ஆடுகிறார்கள்?

**''அன்பு வாணன்''**

# வீட்டுக்குச்சாதகம்! நாட்டுக்குப்பாதகம்!

# கொள்கையல்ல; குமுறவே ஒருகட்சி

## சம்பத்தின் ஆட்டம்

மனத்தாங்கல் ஏற்படுவதும், தாங்கள் தவிர்க்கப்பட முடியாத கட்டத்தில் கட்சியைவிட்டு வெளியேறி கொள்கை நிறைவேற்றத்தை தீவிரப் படுத்துவதும் உலக அரசியலில் சகஜம்.

இம்மாதிரி எத்தனையோ பெரிய தலைவர்கள் கட்சி அமைத்து கொள்கை நிறைவேற்றத்திற்காகப் பாடுபட்டதற்கு சரித்திரம் உண்டு.

வேறு நாடுகள் வேண்டாம்— இந்தியாவையே எடுத்துக்கொள்வோம்.

காங்கிரசிலிருந்து மிகப் பெரிய தலைவர்கள் வெளியேறி தனிக் கட்சி வைத்திருக்கிறார்கள். மகான் திலகர், தேச பந்துதாஸ், மோதிலால் நேரு, லஜபதிராய், நேதாஜி சுபாஷ், ஜனாப் ஜின்னா சீநிவாசய்யங்கார், பசும் பொன் தேவர் போன்ற தலைவர்கள் சாதாரணத் தலைவர்களல்ல — தலைவர்களுக்கே தலைவர்கள்! நாடே அவர்களுக்கு வணங்கிற்று— வணங்குகிறது!

அவர்கள் காங்கிரசை விட்டு வெளியேறி, காங்கிரசை எதிர்த்துக் கொண்டிருக்கவில்லை— அதை ஒழிப்பதற்காக வேறுகட்சிகளோடு சதி செய்யவில்லை. அன்று நாட்டுக்கே பொது எதிரியாக இருந்த ஆங்கிலேயே ஆட்சியை வெளியேற்றவே தம்மால் இயன்ற வழியைத் தொடர்ந்தார்கள்.

காங்கிரஸ் கூட வேண்டாம்· இதே சம்பத், அண்ணாதுரை கோஷ்டி, ஈ. வே. ரா. வின் கிழட்டுத் திருமணத்தைக் காரணமாக வைத்து தி. க. விலிருந்து வெளியேறினார்கள். வெளியேறி தி. க. வின் 'திராவிட நாடு' பிரச்னையை மய்யநிலையாக வைத்து, அக் கொள்கையைத் தீவிரப் படுத்த திட்டமிட்டுக் கொண்டு அதையே மக்களிடம் பேசினார்களே தவிர, தி. க. வையோ. நாயக்கரையோ திட்டவில்லை—தீர்த்துக்கட்ட திட்டமிடமில்லை- சதி எதுவும் செய்யவில்லை.

தி. க. வின் ஆதிக் கொள்கையான 'திராவிட நாடு' (சாத்தியமோ அசாத்தியமோ) என்ற கொள்கையைத் தான் ஒவ்வொரு மேடையிலும் விவரித்தார்கள்— விவரித்தும் வருகிறார்கள்.

இன்று வரை தி. க. வை, தி.மு. க. வினர் தமது தாய்ச் சபையாகவும், ஈ.வே.ரா. வை தந்தை என்ற அந்தஸ்திலும் வைத்தே தான் ஒவ்வொரு தி. மு. க. தலைவர்— தொண்டர் அனைவருமே பாவிக்கிறார்கள்--நாடு கவனிக்காமலில்லை எங்கள் தந்தை என்பதற்குமேல் இதுவரை ஈ. வே. ரா. வை எந்த தி. மு. க. வினரும் பேசியதாக எவர் காதிலும் விழவில்லை.

இதெல்லாம் சம்பத் நேரடியாக சம்பந்தப்பட்ட விவகாரங்கள்.

அவரே தி. மு. க. வானதிலிருந்து, ஈ. வே. ரா. என்ன தவறு செய்தவராக இருந்தும் தந்தைப் பாசத்தோடு அவரை மதித்து, அவரைத் தாக்காமல்விடுத்து, தி. மு. க வின் தி. க. கொள்கையான திராவிட நாட்டை வற்புறுத்தினாரே தவிர, தி. க. வைத்திட்டியதே இல்லை.

இந் நிலையில், சம்பத் அவர் அநுசரித்து அநுபவப்பட்ட ஒரு அரசியல் நாகரீகத்தை, தி. மு. க. வில் இருந்த வரை அநுசரித்து விட்டு, அதிலிருந்து வெளியேறியவுடன், முற்றிலும் மாறுபட்டு, எந்த இடதுசாரியும், அரசியல் வாதியும், நன்றியுணர்ச்சியுள்ளவனும் செய்யாத ஒரு அநாகரிகமான காரியத்தை — அதாவது: தி. மு. க. வை திட்டவும்—தீர்க்கவுமே புதுக் கட்சி வைத்திருக்கிற மாதிரி வேலை செய்தால் இவரது அரசியலை நாடு நம்புமா — நம்பலாமா?

எதிரியின் கோட்டையை இடிக்கச் தூக்கிய கடப்பாறையை சொந்தக் கோட்டையை இடிக்கப் பயன் படுத்திய எவனையும் சரித்திரம் மன்னித்தாக நாமறியவில்லை மக்கள் ஏற்றுக்கொண்டதாகவும் தெரியவில்லை.

தி. மு. க. வைப் பற்றி தி. மு. க. வினரும், சம்பத்தும் எப்படி நினைத்துக் கொண்டிருந்தாலும், மக்களைப் பொறுத்தவரை, தி. மு. க., காங்கிரசை எதிர்க்கும் ஒரு இடதுசாரிக்கட்சி என்பதுதான் அறிமுகம். திராவிட நாடு கேட்கும் கட்சி தி. மு. க. என்பதைவிட, காங்கிரசை எதிர்க்கும்கட்சி என்பதில் தான் மக்களுக்கு அதில் ஒரு அக்கறை—ராஜாஜி போன்ற மிகப்பெருந் தலைவர்களும் தி. மு. க., காங்கிரசை எதிர்க்கும் ஒருகட்சி என்ற அடிப்படையில் தான், அதில் ஒரு அக்கறை கொண்டிருக்கிறாரேன்றி திராவிட நாட்டை சாத்தியமாக்கும் ஒரு கட்சி என்று அல்ல.

திரு. சம்பத் ஆரம்பித்துள்ள புதுக் கட்சிக்கு கொள்கை தமிழ் நாடு பிரிவதுதான் என்றால் அதையும் எவரும் ஆக்ஷேபிக்கவில்லை. முடிந்தால் பிரித்துக் கொள்ளட்டுமென்று விட்டுவிடுவார்கள். உண்மையிலேயே சம்பத்துக்கு கொள்கை தமிழ் நாடென்றால், அவர் மீசையை முறுக்கி மார்தட்ட வேண்டியது காங்கிரசைப் பார்த்தே இருக்க வேண்டுமே யல்லாது தி. மு. க. வைப் பார்த்தல்ல!

தி. மு. க. தமிழ்நாடு கொள்கைக்கோ, கோரிக்கைக்கோ எதிரியல்ல. திராவிட நாட்டுக்கு முன், தமிழ் நாடு சம்பத் மூலம் சாத்தியமாவதாக இருந்தால் சம்பத் தாம் வளர்த்த சிங்கம் என்ற பாசத்தில் தி. மு. க. தலைவர்களும், தொண்டர்களுமே சம்பத்துக்குத் தோள் கொடுத்துதவத் தயங்கமாட்டார்கள்.

இப்பொழுது சம்பத்தின் எதிர்ப்புத் திசையே, தி. மு. க வைத் தான் நோக்கி நிற்கிறதே தவிர, அவரது தமிழ்த் தேசீய கொள்கைக்கு அசல் எதிரியாக விசுவரூபமெடுத்து நிற்கும் காங்கிரசை நோக்கி அல்ல.

சம்பத் அவர்களின் இந்தப் போர்த் திசை நிலையைப் பார்க்கிறபோது, அவருக்கு எதிரியாகத் தெரிவது தி. மு. க வே யன்றி காங்கிரஸ் அல்ல என்பதைப் பட்டை உரித்து காட்டுகிறது.

### "கண்ணகி"

ஆனால், சம்பத் தமிழ்நாடு கோரிக்கையின் வெற்றி தி. மு. க. வின் அறிவகத்துக்குள் அடைத்து வைக்கப்பட்டிருப்பதாக நாடு நினைக்கவில்லை!

திரு. சம்பத்தின் தமிழ்நாடு கோரிக்கைக்கு தி. மு. க. ஒரு தடுப்பு நிலை வகித்தால் தாக்கலாம்—தவறுல்லை.

இரண்டு கட்சிகளுக்குமே வேரும், தூரும் வெவ்வேறு.

சம்பத் கோரிக்கைக்கு சாத்தியமளிக்கும் சக்தி காங்கிரசிடம் தான் இருக்கிறது. அதை எதுவுமே சொல்லவில்லை-சாடவில்லை- சம்பத்! தந்தையை முன் இழந்தேன்—பின்பு தம்பியை இழந்தேன்—என்று இந்தக் கோர நிலையிலும் தாய் நிலை தவறாமல் புலம்புகிற திரு. அண்ணாதுரையின் பேச்சுக்கும், பேச்சை எழுப்புகிற உள்ளத்துக்கும் வக்கணை சொல்லுகிறார்—வசை பாடுகிறார்.

இதுதான் எனது லட்சியம்! தி. மு, க. வின் புதை குழியில் தான் எனது தமிழ்த் தேசீயம் முளைக்க முடியும்! என்று பச்சையாக பிரகடனித்துவிட்டு கச்சை கட்டி களத்தில் இறங்கினால் சம்பத்தைப் பற்றியோ, புதுக்கட்சியைப் பற்றியோ எவரும் கவலைப்படப் போவதில்லை. அவர் தமிழ்நாடு கோரிக்கையை உண்டாக்கி வீட்டில் வைத்துவிட்டு, அதற்காக ஆள்திரட்டாமல் வெளியே வந்து தி. மு. க. வைத் திட்டினால், திரு சம்பத் இடதுசாரி லேபிலோடு, இடதுசாரி மூகாமை இடித்தெறிய முற்படுகிறார் என்றுதான் அர்த்தம்.

ஒரு இடதுசாரி முகாமை, மற்றொரு போலி இடதுசாரி முகாம் இடித்தெறியப் புறப்படுவதைப் பார்த்துக்கொண்டு, மற்றொரு இடதுசாரி முகாம் சும்மா இருக்குமென்று சம்பத் எதிர்பார்த்தால் அவரே அவருக்கொரு எதிரியாக மாறும் கட்டத்தில் அவர் சிக்கித் தவிக்காமல் தப்ப முடியாது.

தி. மு. க. வில் சினிமா நடிகர்கள்— கலைஞர்கள் — ஆதிக்கம் பெருத்துவிட்டது என்பது சம்பத்தின் மொத்தப் புகார்! உண்மையிலேயே சம்பத்திடம் கலைஞர்களை மேவி மேம்படும் ஆக்க சக்தியும் இயக்க சக்தியும் இருக்குமானால் கலைஞர்களைவிட கட்சிக்குள் தான் மேலாதிக்கம் செலுத்த முடிவது சிரமமல்ல, அந்தச் சக்தி அவரிடம் இல்லை என்றே பொருள். அப்படியே கலைஞர்களின் தொடர்பு அவருக்குப் பிடிக்கவில்லையானால் வெளியேறட்டும் பாதகமில்லை.

ஆனால், கலைஞர்களை வெறுக்கிற அவர் கலப்படங்களோடு அல்லவா உறவு வைத்துக் கொண்டிருக்கிறார்! கலைஞர்களைவிட கலப்படங்கள் பெரிதெனக் கருதுகிற அவருடைய அரசியலை எப்படி மதிப்பிடுவதென்றே தெரியவில்லை.

குறிப்பாக சம்பத் ஆரம்பித்திருக்கும் அரசியல் விளையாட்டின் மூலம், அவர், தி. மு. க. வுக்கு மட்டும் கேடு புரியவில்லை—இந்த நாட்டின் இடதுசாரி சக்திக்கே கேடு புரிகிறார்—இது அவரது சொந்த வீட்டுக்குச் சாதகமாக இருக்கலாம். ஆனால், சொந்த நாட்டுக்குப் பெரும் பாதகம் என்பதோடு இந்த வாரத்தை முடிக்கிறோம்.

—0—

# அறப்போர்

ஆசிரியர்: அரங்கண்ணல்

ஒளி - 1 வெள்ளி 26-5-61 கதிர்- 12


## அந்த ஒரு சொல்!

திருச்சிப் பொதுக்கூட்டத்தில் நமது செல்வமாம் அறிஞர் அண்ணா பேசிய பேச்சினை வழக்கம் போல் திரித்துத்தலைப்பிட்ட 'தினத்தந்தி' ஏடு ஒரு வார்த்தையை மென்றுவிடாமல், வெளியிட்டிருக்கிறது. அண்ணா சொன்னாராம், "நான் கழகத்தில் இருக்கிறேனே ஒழிய, நான் அல்ல கழகம்", என்று! இந்த ஒரு சொல்லில் கிடக்கும் அடக்கத்தையும், சனநாயக உணர்ச்சியையும் எண்ணும்போது நமது உடம்பெல்லாம் சிலிர்க்கும்!!

பொது வாழ்க்கையில் புகுந்து, மக்கள் தலைவனாகி, அந்த மக்கள் நான சொல்வதைக் கேட்கும் ஆட்டுமந்தைகளாகயிருக்க வேண்டுமே ஒழிய, அறிவுள்ளவர்களாகயிருக்கக்கூடாது என்று எண்ணுகின்றவர்கள் உண்டு. எண்ணியதை, வெளியில் சொல்லி, 'என் தொண்டர்கள் முட்டாள்கள்' என்று பெருமைப்படும் தலைவர்களும் உண்டு. நாட்டின் தலை 'விதி'யை நிர்மாணிக்கும் பொறுப்பு, தனக்கு மட்டுமே இருப்பதாக மீசையைத் தடவிடும் தலைவர்கள் உண்டு. எப்போதும் தில்லுமுல்லுகளையே பேசி தினம்தினம் பத்திரிகைகள் விற்பனை உயருகிறதா என்று கணக்குப் பார்க்கும் தலைவர்கள் உண்டு. இவர்களையெல்லாம் பார்த்து, "ஏன் நாமும் ஒரு தலைவனாகக் கூடாது?" என்று தலைவர்களாவோரும் இருக்கிறார்கள்! இப்படிப்பட்ட அரசியல் வானிலே, அடக்கமும் 'என்னால் என்ன நடக்கிறது!'எனும் எண்ணமும் கொண்டு விளங்குகிறார், நமது அண்ணன்! அவர் காட்டிய தமிழ், இன்று மணம் வீசுகிறதென்பதை மறுப்பாரில்லை; அவர் வளர்த்த 'பேச்சு' இன்று எங்கும் பின்பற்றப்படுகிறதென்பதை எல்லோரும் ஒப்புவர்; அவருடைய திறமையால், உருவானதுதான் கழகம்; அவர் விரலசைத்தால், கழகத் தொண்டர்களின் இருதயங்களையெல்லாம் அசைக்க முடியும்; அன்பாலேயே, ஒரு குடும்பப்பாசத்தை உண்டாக்கி, நாம் அண்ணனெனவும் அவர் தம்பியெனவும் சொல்லிச்சொல்லி மகிழும் சூழ்நிலையினை உருவாக்கிய அந்தஉத்தமர், உரைக்கிறார். "கழகத்தில் நான் இருக்கிறேனே ஒழிய, நானல்ல கழகம்," என்று! இந்தக் கூற்றிலுள்ள உணர்ச்சியினை, அவர் காணும் கனவினைத் தோழர்காள், நாம் எல்லாம் எண்ணியெண்ணி இறும்பூதெய்த வேண்டும்! இப்படிப்பட்ட எம் தலைவனை, அழுக்குப் பேச்சால், ஆணவத்துடிப்பால், எதுவும் செய்ய முடியாது இந்நாட்டுப் பூர்ஷ்வாக்களால் என்பதை நினைந்து நினைந்து நெஞ்சம் களிக்கவேண்டும்.

அண்ணா, கழகம் என்றால் தன்னுடையது என்று எண்ணவில்லை—நம்முடையது என்கிறார். உருவாக்கியது அவர் என்றாலும், அதன் உரிமை தன்னுடையதென்று வாதாடவில்லை—நம்முடையது என்கிறார். தன்னுடைய சொல்லைத் தம்பியர் மறுக்கார் என்று தெரிந்தாலும், அண்ணா, எந்த முடிவையும் 'நம்மீது' சுமத்துவதில்லை—நீங்கள் முடிவெடுத்துச் சொல்லுங்கள், நான் அதன்படி நடக்கிறேன் என்கிறார். நமது கழகத்திலுள்ள செயற்குழு, பொதுக்குழுபோன்ற அமைப்புகள், அவர் வகுத்துக் கொடுத்தவை. ஆனாலும், அவை வகுக்கும் வழியெதுவோ, அதன்படிதான் நடந்து காட்டுகிறார்.

பலர் கூடி எடுக்கும் முடிவுதான் நல்ல முடிவு—இதுதான் ஜனநாயகம்—சனநாயகப் பண்பை நாம் காப்பாற்ற வேண்டும்—இதுதான், அண்ணா அவர்கள் காட்டி வரும் அறநெறி! வளரவேண்டும் அரசியலில் என்று எதிர்பார்க்கும் உண்மை நெறியும் இதுதான்!!

நானல்ல கழகம்—வளர்ந்திருக்கும் அம்மாபெருங்குடும்பத்தில் நானும் ஒரு அங்கம்—என்று அண்ணா சொல்வதன் மூலம், நமக்கெல்லாம் பெரியதொரு பொறுப்பினை அளிக்கிறார். அப்படிப்பட்ட பொறுப்பினை நாம் பெறவேண்டும் என்பதற்காகவே, நமக்கு சனநாயக வழியினை அத்தங்கம் வகுத்துக் கொடுத்தார். அதனைச் செம்மையாகவும் திறன்படவும் செயல்படும்படிச் செய்ய வேண்டுமென, அவர், நம்மிடமிருந்து எதிர்பார்க்கிறார். அவர், எதிர்பார்ப்பதும் அவருடைய சுபநலத்துக்கல்ல! இப்படிப்பட்ட நிலையில் கழகம் வளர்ந்தால், காணக்கூடிய இன்பத்திராவிடம் எழில் பெறும் என்பது அவருடைய அசைக்கமுடியாத நம்பிக்கை!!

அந்த நம்பிக்கை வளரும் வழியில், நம்முடைய தகுதிகளையும் செயல்திறனையும் வளர்த்துக் காட்டுவதன்றி நாம் அவருக்குச் செய்ய, என்ன இருக்கிறது! அவர் பார்த்து மகிழும்படி, கழகப்பணிகளை, அடக்கத்தோடும், அன்புவழியிலும் செய்வதன்றி வேறென்ன இருக்கிறது, நமக்கு!!

—0—

## சலசலப்பு ஜானகி



'சலசலப்பு ஜானகி' 'கற்பனைக் கமலா' இரண்டுபேரும் சேர்ந்து வருகிறார்களென்றால், எங்களூரிப் பெண்கள் உடனே கதவைச்சாத்திக்கொண்டு உள்ளே போய்விடுவார்கள்! ஜானகியும் கமலாவும் வாலிபர்கள்!! திகைக்கிறீர்களா, பெயர்களைப் பார்த்தால் பெண்களாயிருக்கிறதே, வாலிபர்கள் என்கிறேனே என்று! இப்படிப்பட்டத் திகைப்பு, எங்களூரிலுள்ள பெண்களுக்கு ஏற்பட வேண்டும், அப்படியொரு திகைப்பு ஏற்பட்டால் தங்களைப் பற்றியே அவர்கள் பேசுவார்கள், அப்படிப் பேச ஆரம்பித்தால் பலரும் தங்களைப்பார்க்க ஆசைப்படுவார்கள், ஆசைப்பட்டால் உனக்கு எனக்கு என்று போட்டிபோட்டுக் கொண்டு காதலிப்பதற்கு வந்து மொய்ப்பார்கள், அப்படி மொய்க்கும்போது நமக்குப்பிடித்தமான ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம் என்று 'ஐடியா' கொடுத்தவன், கமலா! அதை நிறைவேற்றப் பாடுபட்டான் ஜானகி! கமலாதான் என்கிற பெயர் கமலநாதனுக்கும், ஜானகிராமன் என்கிற பெயர் ஜானகியாகவும் மாறியதே தவிர நீண்டகாலம் வரையில் பலனேதும் கிட்டவில்லை. பணக்கார வீட்டுப் பிள்ளையான ஜானகிராமனுக்கு உடம்பு கொழுத்த அளவுக்கு மூளை பெருக்கவில்லை. தின்றுவிட்டு வேறு வேலையில்லாத அவனுக்குச் சினேகிதனாகக் கிடைத்தான் கமலநாதன். பணக்கார வீட்டுப் பிள்ளையின் துக்கத்தைப்போக்க 'ஐடியா' கொடுக்காவிட்டால், 'போடா போ' என்று சொல்லிவிடுகிறான் எரிச்சலில் என்று வைத்துக்கொள்ளுங்கள்—என்ன செய்யமுடியும் கமலாவால்-இத்தனை நாளும் அனுபவித்துவரும் இன்ப வாழ்வு, ஏழையான அவனுக்கு இல்லாமற் போய்விடுமே!! அதனால்,

"இதோ பாரு ஜானகி! பெண்களுக்கு யார் புகழோடு இருக்கிறார்களோ, அவர்கள்மீதுதான் காதல் வரும். புகழோடு இருக்க வேண்டுமென்றால், எதையாவது செய்து, எப்பொழுது பார்த்தாலும் நம்மைப் பற்றி ஊர் மக்கள் பேசிக்கொண்டே யிருக்கும்படி செய்யவேண்டும்," என்று சொன்னான்.

அதன் விளைவாகப் புகழ் வேட்டையில் தீவிரமாக ஈடுபட்டார்கள், இரண்டு நண்பர்களும். "தெரியுமா சேதி! ஜானகி, கூட்டுறவுச் சங்கத் தலைவராக வரப் போகிறான்—பெரியோர்களே ஆதரியுங்கள்" என்று ஒரு துண்டு நோட்டீசு கிளம்பும். உடனே அதை மறுத்து, 'தெரிந்துகொள்ளுங்கள்!' என்று தலைப்பிட்டு, இப்படியொரு பலத்த வதந்தி கிளம்பியிருப்பதைத் தான் மறுப்பதாகவும், தனக்குத் தலைவராக வர ஆசையில்லை யென்றும், இன்னொரு துண்டு நோட்டீசு புறப்படும்.

இதிலொரு வேடிக்கை இரண்டு நோட்டீசுகளையும், கமலா தான், எழுதிக் கொடுப்பான்! இன்னும் பெரிய வேடிக்கை இரண்டையும் கமலாதான் செய்கிறான் என்பது எங்களூரில் எல்லோருக்குமே தெரியும்!! துண்டு நோட்டீசு எழுதுவது,சுவர்களில் ஏதாவது ஜானகியைப் பற்றி எழுதச் சொல்வது, ஏதாவது ஒரு கட்சியின் கிளையை ஆரம்பிக்க முயல்வது, அதற்கு வால்போஸ்டர் போடுவது, இப்படிப் பலவித 'ஐடியா'க்கள் புறப்படும், கமலாவிடமிருந்து. இதனால் 'கற்பனைக் கமலா' என்கிற பட்டம் கமலாவுக்கும், 'சலசலப்பு ஜானகி'என்கிற பெயர் ஜானகிக்கும் கிடைத்தது தான் மிச்சமே ஒழிய, அவர்களது மூலஇலட்சியமான 'காதல்' மட்டும் கைகூடவில்லை!!— எந்தப் பெண்ணும் பெருத்து விளங்கிய 'பெருமைக்குரிய' ஜானகியை ஏறெடுத்தும் பார்க்கவில்லை! இதைவிட விந்தை எங்களூருக்கே, 'ஜானகி, இந்த ஆசையால் தான் இப்படிச் சலசலப்பை உண்டு பண்ணுகிறான்' என்று நன்றாகப் புரிந்து விட்டது! திடீரென ஒரு நாளைக்கு, ஆடுகள் பூட்டிய சிறு வண்டி ஒன்றுவாங்கி கமலா ஓட்ட ஜானகி பவனி வருவான்-ஆட்டு வண்டியில்சவாரி செய்தார்ஜானகி என்ன அதிசயம்! என்று எல்லோரும் பேசுவார்கள் என்று எண்ணம்.

அரங்கண்ணல்

மக்களோ, என்னய்யாஇதுமடத்தனம், இரண்டணா கொடுத்தால் இறக்கிவிட டவுன் பஸ் இருக்கும் போது ஆடாம்! வண்டியாமே!! சீச்சீ, என்று பேசுவார்கள். நன்றாகயிருந்த 'கிராப்பை' எடுத்து விட்டுமொட்டையடித்துக் கொண்டு கிளம்புவான், சானகி —திடீரென பெண்களின் ரவிக்கைக்குப் பயன்படும் துணியைச் சட்டையாகத் தைத்துப்போட்டுக்கொண்டு, வலம் வருவான்—இப்படி என்னென்னமோ 'கற்பனைகளை' கமலா உதிர்த்து விட்டும், 'சலசலப்பு' என்கிற பட்டம் சானகிக்குக் கிடைத்தது தான் மிச்சமே ஒழிய, எந்தப் பெண்ணும் ஏறெடுத்துப் பார்க்கவில்லை! தமிழ்நாட்டுப் பெண்களுக்கென்ன மூளையா கிடையாது? தடியர்கள் யார், தன்மையுள்ளவன் யார் என்று, அவர்களுக்காப்புரியாது? ஆரம்பத்தில்,இந்த 'நகைச் சுவைக் கதாநாயகனை'ப் பார்க்கும் ஆவலில், கதவுகளையும் சன்னல்களையும் திறந்து கொண்டு நின்றதுண்டுஅவர்கள். நாளாகஆக, சீச்சீ!காலிப்பசங்க! முகத்திலே விழிப்பதுகூடத்தவறு என்கிற முடிவுக்கே வந்து விட்டார்கள். பணம்படுத்துகிற பாடப்பா! காதல் என்ன கத்தரிக்காயா, பேரம் பேசி, வாங்க! பைத்தியக்காரன்! ஒழுங்கான ஒரு பெண்ணைப் பார்த்து வாழக் கூடாதா?—செச்சே! பணக் கொழுப்பு, இப்படி ஆட்டம்போடுகிறான்—இது போன்ற பட்டங்களும்.வாழ்த்துக்களுமே கிடைத்தன.

"தூற்றுறவங்க தூற்றட்டும், நமக்கென்ன ஜானகி! நம் இலட்சியம் காதல்! இதை எந்தப்பயல் தடுத்தாலும் எதிர்த்து நின்று, நான் மட்டும், சண்டை போடுவேன். பார்! பார்! இப்படியெல்லாம் செய்தும், இன்னும் நம் மீது யாருக்கும் கவலை பிறக்கவில்லையல்லவா? இதற்குக் காரணம் என்னவென்பதைக் கண்டுபிடித்துவிட்டேன்.

"புகழ் வருவதற்குரிய வழிகள், மற்றவர்கள் கவனத்தைக் கவரும் வகையில் சலசலப்பை உண்டாக்குவது மட்டுமல்ல. அதைக் கண்டு மக்கள் வேடிக்கையென்று போய் விடுகிறார்களே ஒழிய, யாரும்முக்கியத்துவம் கொடுப்பதில்லை. இதனால் தான் நம்முடைய முயற்சி பலிக்கவில்லை. அதனால்,இப்போது ஒருவழி கண்டுபிடித்திருக்கிறேன். நேற்று ராத்திரி யோசித்துக் கொண்டேயிருந்த பொழுது 'திடீரென' மூளையில் உதித்த ஐடியாவை, உன்னிடம் சொல்கிறேன். பெண்களுடைய கவனத்தைக் கவர வேண்டுமென்றால், அவர்களுடைய அனுதாபத்தைப் பெறவேண்டும், ஐயோ, பாவம்! என்று அவர்கள் அனுதாபப்படும்படி நாம் நடக்கவேண்டும்"

"அனுதாபப்படும் படி நடக்கணும்னு என்னடா செய்றது?"

"நீ ஒன்றும் செய்யவேண்டாம். எங்கே பெண்கள் அதிகம் கூடுவார்கள்? குளக்கரை, ஆற்றங்கரைதானே. சாயங்காலம் அங்கேபோ! ஒரு ஆள் வந்து, நிற்பான். டேய்! பெண்கள் கூடுகிற இடத்தில் வருவது நாணயமா? கண்ணியமா? ஒழுக்கமா! என்று கேள். அவன் முறைப்பான். நீ அடிக்கப் போவது போல்போ. உன்னை வெளு வெளு என்று வெளுக்கும்படி நான் ஏற்பாடு செய்கிறேன். உன்னை அடித்துப் போட்டுவிட்டு, அவன் ஓடியதும், "அய்யோ அநியாயம்! என்னைக் காப்பாற்ற வாங்க. வாங்க. உங்களுக்காகச் சண்டைக்குப் போயி, உதை வாங்கிட்ட என்னை வந்து பாருங்கன்னுகத்து..."

"டேய்! உதை வாங்கின என் உடம்பு தாங்குமாடா!"

"உன் உருவத்துக்கு ஒரு காதலி வேணும்னு அப்ப நடக்குமாடா?"

"அப்ப சரிடா! நீ சொல்றபடி செய்றேன். அடிக்க வர்ற ஆளை வலிக்காமல் அடிக்கச் சொல்லு"

கமலாவின் கற்பனையில் உதித்த இந்த நாடகமும் சில இடங்களில் நடந்தது! முதல் தடவை ஓரிடத்தில் நடைபெற்ற பொழுது உண்மையிலேயே சில பெண்கள் பரிதாபப்பட்டுக் காப்பாற்ற வந்தார்கள். காப்பாற்றவந்தவர்களை 'காதல் வீரன்' பார்த்த பார்வையைக் கண்ட கன்னியர், தூ! தூ!! என்று போயினர். இன்னொரு இடத்தில் இரண்டாம் தடவையாக இந்த 'ஒத்திகை' நடந்த பொழுது, அடிப்பட்ட ஜானகி கதறியது தான் மிச்சமே ஒழிய, யாரும் கவலைப்படவில்லை.ஏனென்றால் இந்த ஜோடிகளைப்பற்றிய வரலாறுதான் எல்லோருக்கும் தெரியுமே!!

"என்ன பெண்கள்! இப்படி அடிபட்டுக் கிடக்கிறேன். ஒருவர் கூட, என் பக்கம் வரவில்லை", என்று அழுத ஜானகியின் கண்ணீரைக் கண்ட கமலா, "கவலைப்படாதே ஜானகி! இதோ பார்...என்ன பரபரப்பை உண்டு பண்ணுகிறேன்." என்று ஒரு துண்டு நோட்டீஸ் அச்சடித்து, அதை ஊரெங்கும் பரப்பினான்.

போலீஸ் இருக்கிறதா! செத்ததா—எங்கு உண்டு இக்கோரம்?—அடித்தவனை ஏன் பிடிக்கவில்லை?—லஞ்சம்! ஊழலா!—ஊர்ப்பெண்களைக் காப்பாற்றப் போன உத்தமனுக்கேற்பட்ட கதி—

கமலநாதன், கற்பனையில் வல்லவனாயிற்றே? வரைந்து தள்ளினான்—பிரசுக்காரனும் அடித்துத்தள்ளினான்—எங்கும் மூட்டை மூட்டையாக நோட்டீசுகள் தள்ளப்பட்டன—இந்த நோட்டீசைக் கண்ட அவ்வூர் போலீஸ் அதிகாரிகள் மிரண்டு போயினர்—எதற்கும் இப்போது மிரளவேண்டிய சுயராஜ்ய ஆட்சி அல்லவா!—அதனால் தேடுதேடென்று தேடி அடித்தவனைக் கொண்டுவந்து விசாரித்தனர்—விசாரித்துக் கொண்டிருக்கும்போதே கற்பனைக் கமலா, இன்னொரு துண்டு நோட்டீஸ் போட்டான்—

உத்தமனை அடித்தவன் கைது! தானே காசு கொடுத்து அடிக்கச் சொன்னதாக ஜானகிமீது குற்றம் சுமத்துகிறானும்!—இப்படியும் நடக்குமா?—காசு கொடுத்து அடிவாங்கும் கதையும் உண்டா!! அக்கிரமம்,' அக்கிரமம்—என்பதாக!!

என்ன செய்வார்கள் போலீஸ் அதிகாரிகள்? அடித்தவன் என்னென்னமோ சொன்னான், அவர்களால் நம்ப முடியவில்லை. அதனால், அடித்தவன்மீது கேசு போட்டு உள்ளே தள்ளினார்கள் உடனே அதற்கும்—

உண்மை வெளியானது! உத்தமர் ஜானகியை ஒழிக்கச் சதி! குற்றவாளிப் பேய், கூண்டில்!—

என்று துண்டு நோட்டீஸ் போட்டான், கற்பனைக் கமலா. சிறைக்குச் சென்றவன் விடுதலையானதும் இந்த நோட்டீசைக் கண்டுவிட்டு டேய்! முந்தி உன் பேச்சைக் கேட்டு உன்னை அடித்துவிட்டு ஜெயிலுக்குப் போனேன், இப்போது உண்மையாகவே உன்னை நொறுக்கிவிட்டுப் போகிறேன் என்று உலாவுவதாக, எங்களூரில் பேசிக்கொண்டார்கள்! இதற்கும் ஒரு 'பிட் நோட்டீசு' போட்டான் கமலா- -

அய்யகோ? வெளியில் வந்தவன் வீரம்!—என்ன ஆவாரோ ஜானகி! பெண்ணுரிமைக்காக எழுந்த சிங்கத்துக்குப் பங்கமா? என்று

எங்களூரில், ஆரம்பத்தில் இதற்கு ஒரு பரபரப்பு இருந்ததே ஒழிய, 'யார்? அந்த ஜானகியா! அவன் யோக்கியதை தெரியாதா! வேலையற்றவன்க! இதா நமக்கு வேலை?" என்று ஒதுக்கிவிட்டார்கள். எதிர்பார்த்த 'பலன்' இப்படியும் கிடைக்காமற் போகவே, ஜானகி, கவலையின் பிம்பமானான் கமலாவோ தன் கற்பனைப் பலிக்கவில்லையே என்று கலங்கலானான்!! இந்தச் சமயம்தான், இன்பத்தை உண்டாக்கும் விதத்தில் ஒரு கடிதம் வந்தது. அருணா என்பவள் தீட்டியிருந்த அந்தக் கடிதத்தைக் கண்டதும், வீராதி வீரனான ஜானகி, வேகமாக வந்து கமலாவிடம் காட்டினான். அந்தக் கடிதம் இது!

அன்பே! சிங்கமே!!

பெண்ணுரிமைக்காகத் தாங்கள் அடிபட்டு, பொன்னானமேனி கன்னிப் போகும் அளவுக்கு உருண்டெழுந்தீர்கள் என்றது முதல், ஊரெல்லாம் உங்களைப் பற்றிப் பேசுவதைக்கண்டேன். இப்படிப் புகழ் பெற்ற ஒருவரை, ஒரு கர்ம வீரரை மணக்க வேண்டுமென்கிற சபதம் கொண்டுள்ள எனக்கு, தேன் குடித்தது போலாயிற்று. உடனே உங்கள்மீது காதல் கொண்டுவிட்டேன். கடிதமும் எழுதிவிட்டேன். நான் யாரோ என்று நீங்கள் திகைக்கக் கூடாது என்பதால், இத்துடன் என் புகைப் படமும் அனுப்பியிருக்கிறேன். ஊருக்குப் புதிதாக வந்துள்ள நாடகக் கொட்டகைக்கு இன்றைக்கு இரவு வந்தால் என்னைச் சந்திக்கலாம். ஏனெனில் நான்தான் நாடகத்தின் பிரதம நடிகை. அவசியம் வாருங்கள் அன்பே' தாருங்கள்!!

இப்படிக்கு,

அருணா.

எப்படி யிருந்திருக்கும், காதலுக்காக, ஏங்கிய காளைக்கு!

இரண்டு நண்பர்களும் ஒருவரையொருவர் கட்டிக்கொண்டு கூத்தாடலாயினர்! இத்தனை நாளாகப் பட்டபாட்டிற்குச் சரியான அறுவடையடா, என்றான் கமலா. எப்படியிருக்கிறாள் பார்த்தாயா, என்று படத்தைக் காட்டி வர்ணித்தான். ஜானகியும் தன் ஆசையை நிறைவேற்ற ஒரு காதலி கிடைத்து விட்டாளென்று அன்றே இரண்டு முதல் வகுப்பு டிக்கட்டு வாங்கிக்கொண்டு, நாடகத்துக்குப் போனான். ஆடிப்பாடும் அருணாவைக் கண்டான்! "உன் மீதுதான் ஆசை, வச்சேனே, நான் மச்சான்!" என்று அருணா, தன்னை மனதில் வைத்துப் பாடுவதாகவே எண்ணினான். அன்று இரவு முழுவதும், அவளுடைய புகைப்படம் அவன் படுக்கையிலேயே கிடந்தது எண்ணாததெல்லாம் எண்ணினான் ஜானகி.

இரவு போய் பொழுதும் விடிந்தது, கமலாவை அழைத்துவரச் சொல்லி, இருவரும் சேர்ந்து கடிதம் எழுத உட்கார்ந்தனர் தான் கேட்டிருந்த சினிமாப் பாட்டுகளையெல்லாம் சேர்த்து, ஒரு பெரிய காவியத்தையே எழுதினான்! மொத்தம் நூறு பக்கங்கள் இருக்கும்—காலையில் உட்கார்ந்த கமலா, மாலையில்தான் எழுதி முடித்தான்.

கடிதத்தைத் தபாலில் அனுப்ப மட்டும்—தபால் மட்டும் எழுதுக! நேரிலோ, ஆள் மூலமோ சந்திக்க இப்போது முயற்சிக்க வேண்டாம்! என் முதலாளிக்குத் தெரிந்தால் ஆபத்து!! என்று எழுதியிருந்தாள் அருணா--நிறையச் செலவாயிற்று!! அக்கடிதத்தில், கமலா அவளது நாடக நடிப்பைப் பற்றிப் பிரமாதமாகப் புகழ்ந்திருந்தான். தமிழகத்தின் காதலெல்லாம் திரண்டு உருண்டு உருப்பெற்ற உருவம் அவள் என்று எழுதியிருந்தான்.

அன்று மாலையும் இரண்டு நண்பர்களும், நாடகத்துக்குப்போய் முதல் வகுப்பு டிக்கட்டு வாங்கிக் கொண்டு உட்கார்ந்தார்கள்.

எங்கே போகிறாள் அருணா, அவள் எப்படி யிருப்பாள், என்கிற விபரங்களை விசாரித்தறியுமாறு தன் நண்பன் கமலாவை நோண்டினான் ஜானகி! நண்பனின் தவிப்பைக்கண்ட கமலாவும், பெரிய துப்பறியும் அதிகாரிபோல, நாடக நடிகர்கள் தங்கியிருந்த இடத்தை வட்

(2-ம் பக்கம் பார்க்க)


**9-6-61-ல் பவனி வருகிறது!**

**"முக்கனி"**

(மாத இதழ்)

ஆசிரியர் பன்மொழிப் புலவர், சுந்தரவேலனார் பேராசிரியர் மயிலை-சிவமுத்து, பேராசிரியர் அ.மு பரமசிவானந்தம், முத்தமிழ்க்காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம், பேராசிரியர் க. பொ. இரத்தினம் (யாழ்ப்பாணம்) பேராசிரியர் இராமநாதம் பிள்ளை (யாழ்ப்பாணம்) ஆகியோரின் சிறப்புக் கட்டுரைகளுடனும் ஆசிரியரின் ஆராய்ச்சிக் கட்டுரைகளுடனும் வெளிவருகிறது. முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் தேவை.

விபரங்கட்கு

பொறுப்பாளர், 'முக்கனி' 18-மீரான் சாயபுதெரு, சென்னை-2

சாவு பன் முறை அவன் கத வருகே எட்டிப்பார்த்தது. தட்டிப் பார்த்தது. மருத்துவமனை வராண்டாவில் அழுகுரல்கள் எதிரொலித்தன. உற்ருரும், உறவினர்களும் கோபியை கடைசி முறையாக ஒரு கண் பார்ப்பதற்காக ஓடோடியும் வந்தனர். கோபியின் உயிர் ஊசலாடிக் கொண்டிருந்தது. ஒவ்வொரு நிமிடமும் அவன் செத்துப்பிழைத்துக் கொண்டிருந்தான்......

ஆனுல் சரோஜினி அழவில்லை. மார்பிலே அடித்துக் கொண்டு ஒப்பாரி வைக்கவில்லை. அவன் பிழைத்துக் கொள்வான் என்ற பாறையை விட கெட்டியான அவளுடைய நம்பிக்கைக்கு சூறைக்காற்றிலும் அணையாத அகல் விளக்கைப் போன்ற நல்லெண்ணத்திற்கு நவீன வைத்தியத்துறைக்கு, இறுதி கட்டத்தில் சாவு பணிந்துவிட்டது.


கடந்த ஒன்றே கால் மாதமாக உணவின்றி, உறக்கமின்றி கடிகாரத்தைப்போல் இராப் பகலாக அவனுக்கு பணிவிடை செய்து கொண்டிருந்தாள்.

'அது ஒரு மனைவியின் கடமை'

அவளுடைய உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து இந்த குரல் அடிக்கடி எழும். ஒரு மனித உயிர் சாவுடன் போராடிக் கொண்டிருக்கும் பொழுது யார்தான் கை கட்டிப்பார்த்துக் கொண்டிருப்பார்கள்! அவள் பெற்ரேர்களுடன் புறப்பட்டு வந்ததும், மருத்துவ மனையிலேயே தங்கி அவனுக்கு பணிவிடை புரிவதும், இந்த நல்லெண்ணத்தின் அடிப்படையில் தான்.

"இந்த நிலை தனக்கு வந்திருந்தால் அந்த மனிதர் இந்த பக்கம் தலை வைத்துக் கூட படுக்க மாட்டாரே! ... சனியன் செத்துத் தொலைந்தால் நன்ருயிருக்கும் என்றல்லவா நினைத்திருப்பார்.

**✶ கேரளக் கதை**



# இரும்பும் தங்கமும்

பாலகிருட்டிணன்

அப்பொழுதுதான் அந்த அழகிய டைப்பிஸ்டை மணந்து கொண்டு இன்புற முடியும்!'' இவ்வாறு பல எண்ணங்கள் அவள் மனதில் எழுந்து நின்றன.

அவளுடைய கண் முன்னுல் அவன் ஒரு வருடம் இந்த நாடகத்தை நடத்திக் காட்டினுன். இல்லை, நடித்துக் காட்டினுன். வெறுப்பதற்கும், வெறுக்கப்படுவதற்குமான எல்லாக் காய்களும் நகர்த்தப்பட்டன. கறுத்தவளும், அழகற்றவளும் என்ற ஒரே காரணத்திற்காக கணவனுடைய அன்பு அவளுக்கு மறுக்கபட்டது சதா அடியும் உதையும் அவளுக்கு ஒரு நித்திய நிகழ்ச்சியாக ஆகிவிட்டது. எல்லாவற்றையும் தன் நெஞ்சுக்குள்ளேயே புதைத்துக் கொண்டு, மௌனியாகி விட்டாள்.

ஒரு நாள் துன்பம் தாங்கொணுது அவள் வெளிப்படையாக கேட்டு விட்டாள்.

"ஒரு தவறும் செய்யாதவளை ஏன் இப்படி தண்டிக்கிறீர்கள்?''

அவன் அதைக் காதில் போட்டுக் கொள்ளாதவனைப்போல நடித்தான். அவள் மீண்டும் விம்மலை அடக்கிக் கொண்டு கூறினுள்.

"நீங்கள் என்னை வெறுப்பதற்கான காரணம் எனக்கு தெரிந்து தான் தீர வேண்டும்''

அவன் பரிகாசமாக அவளைப் பார்த்துக் கிண்டல் செய்தான்.

"அப்பொழுது உனக்கு தெரிந்து தான் ஆக வேண்டும் இல்லையா?

அவளும் சளைக்காமல் உறுதியாகக் கூறினுள்.

"ஆம். தெரிந்துதான் ஆக வேண்டும்''

"அப்படியானுல் கண்ணுடியில் நீயே உன் முகத்தைப்பார். காரணம்கேட்கவந்துவிட்டாள். பெரிய காரணம்'' அவன் கூறினுன்.

"திருமணத்திற்கு முன் அதை நீங்கள் செய்திருக்கவேண்டும். வரப்போகிற பெண் தன்னுடைய அழகிற்குப் பொருத்தமானவள் தானு என்பதை நீங்கள் முன்கூட்டி தீர்மானித்திருக்க வேண்டும்.

"உன்னுடைய அறிவுரை எனக்குத் தேவையில்லை''

"இது அறிவுரையல்ல. விஷயத்தை விளக்கினேன் அவ்வளவுதான்''

"ஷட்டப்!''

அவன் அறையைவிட்டு வெளியேறினுன். அவள் உதட்டை கடித்துக் கொண்டு, அவன் சென்ற திசையையே ஏறிட்டு நோக்கினுள்.

இப்பொழுது அவளுக்கு அழுகை வரவில்லை. இதயத்தில் வேதனை கொப்பளிக்கவில்லை. மாருக வைராக்கியம் பிறந்தது. மனைவியை வெறுத்து ஒதுக்குவது வீரமாகாது. அது கோழைத்தனம். அவள் தனக்குள் கூறிக் கொண்டாள்.

"இன்றிலிருந்து நானும் உங்களை வெறுக்கிறேன். பலமாக வெறுக்கிறேன்''

அவள் மனதிற்குள் ஒரு முடிவெடுத்தாள்.

பிறந்தகத்திற்கு வந்து பிறகு கணவன் வீடு செல்லாதிருப்பதைக் கண்டதும் முணுமுணுப்புகள் எழுந்தன. சந்தேகங்கள் பிறந்தன. வதந்திகளும், வினுக்களும் அணிவகுத்தன.

பெற்ருேர்களைப்பார்த்து அவள் கேட்டாள்.

"நீங்கள் என்னை எங்கு போகச் சொல்லுகிறீர்கள்?... ஒரு துளி அன்பு நீருக்காக தாகமெடுத்துத் தவித்த அந்த பாலைவனத்திற்கா? இனி அங்கே போக வேண்டுமென்பதில்லை, வேதனையைத் தாங்கிக் கொண்டு மோனச் சூழ்நிலையில் ஏகாந்தமாக இங்கேயே வாழ அனுமதித்தால் போதுமானது''

**அ**ய்யாயிரம் ரூபாய் ரொக்கமாக வரதட்சிணை கிடைத்த பொழுது கணவன் நினைத்திருப்பான். ரூபாய் கிடைத்தது ஒரு லாபம் அவள் வீட்டுக்கு வந்ததும் பிறகு சண்டை போட்டு விரட்டி விட்டால் போகிறது என்று. அவளுடைய பெற்ருேர்களோ, கறுத்து அழகற்ற தங்களுடைய மகளுக்கு அழகனும், நல்ல உத்தியோகஸ்தனுமாகிய ஒரு கணவன் கிடைத்தானே, ம் அது வரைக்கும் லாபம் என்று நினைத்திருப்பார்கள்... ... ...ஆக இருதரப்பினராலும் சரோஜினியைப் பொறுத்த மட்டில் பெரிய நஷ்டம்!

சுவற்றில் மாட்டப்பட்டிருந்த திருமணப் போட்டோவை அவள் வைராக்கியத்துடன் நோக்கினுள் அந்த வஞ்சகக்கண்கள் அழகை மட்டும் தான் தேடுகின்றன. அந்த முகத்தை இனி காணவே வேண்டாம். ஸ்டூலை எடுத்துப் போட்டு, அதன் மேலேறி போட்டோவை கழற்றி பெட்டியின் அடியில் வைத்தாள்.

"சரோ, என்னம்மா செய்யறே?''

அவள் திரும்பிப் பார்த்தாள், தாய் நின்று கொண்டிருந்தாள்.

"ஒண்ணுமில்லேம்மா, இந்த போட்டோவை கழற்றி பெட்டியில் வைக்கிறேன் அவ்வளவு தான்'' அவள் சிரித்துக் கொண்டே கூறினுள். தாய் அழுது விட்டாள்.

"அம்மா உங்களுக்கெல்லாம் என் கல்யாணம் நடைபெற வேண்டுமென்று ஆசையாக இருந்தது. அதுதான் நடந்துவிட்டதே! இனியாவது உங்களின் அழுகையை நிறுத்தக்கூடாதா?' அவள் உணர்ச்சிவசப்பட்டு கேட்டாள்.

"மகளே!... உனக்கு இந்தக் கதியா வர வேண்டும்'' தாய் ஒவென்று அழுதுவிட்டாள். அவளும் தாயை அணைத்துக் கொண்டு அழ ஆரம்பித்தாள்... அவளுக்குக்கூறவேண்டும்போலிருந்தது. இரும்பும தங்கமும் என்றைக்கும் ஒன்று சேராதம்மா!... இல்லாவிட்டால் மற்ரெருத்தியின் காதல் கடிதம் கணவனுடைய சேப்பியிலிருந்து கிடைக்குமா? அவள் அதை படித்துக் கொண்டிருக்கும் போது கோபி அறைக்குள் நுழைந்து விட்டான். அவள் கடிதத்தை மடித்து, கையில் மறைத்துப் பிடித்தவாறு கேட்டாள்.

"இப்பொழுது புதுப்புது ஆட்களெல்லாம் உங்களுக்குக் கடிதம் எழுத ஆரம்பித்திருக்கிருர்களே!''

"இருக்கலாம். எனக்கு யார் யாரோ கடிதம் எழுதுவார்கள். அதற்கு உனக்கு என்ன?''

"அந்த யார் யாரோ பட்டியலில் கமலா என்ற ஒரு பெண் இருக்கிருளா?''

அவன் திடுக்கிட்டான். பிறகு கத்தினுன்.

"என்னுடைய கடிதத்தை உன்னையார் படிக்கச் சொன்னது?''

"எனக்குத் தெரியவேண்டியது உங்கள் மனைவி, நானு அல்லது கமலா என்னும் அந்த டைப்பிஸ்டா என்பது தான்!!

இதைக் கூறி முடிப்பதற்குள் அவனுடைய கரங்கள் மிக அழுத்தமாக அவள் முகத்தில் பதிந்தன...அந்த இடியோசையைத் தொடர்ந்து அவள் கண்களில் மின்னல் மின்னியது. தலை சுற்றியது. கீழே விழாமலிருக்க சுவற்றில் சாய்ந்து கொண்டாள்.

(11-ம் பக்கம் காண்க)



# நமது பாசறை

## என். வி. என்.

காங்கிரசே பாழடைந்த கோட்டை—அங்கே
கனமனிதர் பணமுதலை 'இது'களுக்குத் தான்வேட்டை!
சிங்கநிகர் தமிழ்மொழிக்குக் காட்டுகின்றார் சுடுகாட்டை!
அங்கே அமர்த்தப் பார்க்கின்றார் இந்தி ஆட்டை!

சந்தி சிரித்தமொழி இந்திமொழி! அந்தமொழி
சொந்தமொழி தலைவிழுங்க வந்து புகுந்திடுமோ?

விட்டேனா பார்!என்று வெட்கமிலாக் காங்கிரசை
விட்டுப் பிரிந்துவந்தார் பழம்நாளில்! அன்று
தொட்டுத் தமிழர்துயர் தொட்டுத் துடைக்கின்ற
கட்டிப்பொன்! கற்கண்டு! கரும்புத் துண்டு!

வாய்க்கால் வரப்பு
வழியெல்லாம் பாதத்தை
தாக்கும்முள் கிடக்கின்ற
தடங்களுக்கு நடுவினிலே
இருக்கின்ற சிற்றூரா? எழில்மிகுந்த பேரூரா?

எங்கெங்கும் சென்று இயக்கத்துக் கொள்கைதனைத்
தங்கு தடையில்லாத் தமிழ்நடையில் எடுத்துரைத்துக்
கழகத்தை வளர்த்துநலம் கண்டுவரும் தொண்டர்இவர்!

தென்னாட்டை விழுங்கிவரும் டில்லி!
தீமைகளைத் தினம்எடுத்துச் சொல்லி
திராவிடத்தை மீட்பதற்குப்
பாடுபடும் இவர்மிகவும் ஒல்லி!—இருந்தாலும்

இதயமென்ன எரிமலையா? எலும்பெல்லாம் இரும்பா?
எதையெதையோ செய்தாலும் இருட்டறையில் அடைத்
—தாலும்
அஞ்சாத ஆள்இந்த ஆள்என்று தொண்டரில்லாப்
பஞ்சநிலை கண்டு பழுதடையும் காங்கிரசார்
அஞ்சி வயிறெரிவார்! அஞ்சா நெஞ்சன்இவர்!

பாட்டுகதை கட்டுரைகள் பாங்கான செய்தியொடு
ஏட்டுலகில் நெடுநாளாய் இயங்கிவரும் திராவிடனின்
ஆசிரியர்! தன்னிடத்தில் அன்புடையோர் எவர்க்கும்
நேசமிகக் காட்டி நெருங்கிமிகப் பழகுபவர்!

இனிமை எளிமை இவற்றின் இருப்பிடமாய்க்
கனிந்த முகம்மலரக், கண்ணாடி
அணிந்த முகம்மலர அடைந்த புகழ்பெருக்கி
நாளும் பணிபுரியும் நம்அண்ணன்! யார்?
அவர்தான் என். வி. நடராசன்!

'பொன்னிவளவன்'

* * *

4-ம் பக்கத் தொடர்ச்சி

அவனுடைய மனைவியும், குழந்தைகளும் ஆஸ்டிரியாவில் தான் இருந்தனர்! அவர்கள் இருந்த ஊரின் பெயர் லின்ஸ் என்பதாகும். இஸ்ரேல் அரசு, ஒரு ஒற்றனை, இந்நகருக்கு அனுப்பியது. எவ்வளவு தான் கொடுங்கோலனாகயிருந்தாலும், மனைவி மக்களுக்கு கடிதம் எழுதுவானல்லவா அதன் மூலம் அவன் எங்கேயிருக்கிறான் என்பதைச் சுலபமாக கண்டுபிடித்துவிடலாம் என்று யூத ஒற்றர் எண்ணினார்!! அதனால், ஈச்மென் மனைவி யிருந்த வீட்டுக்குப் பக்கத்தில், ஒரு கடையைவிலைபேசி வாங்கிக் கொண்டு வியாபாரிபோல இருந்தார். திடீரென ஒரு நாள் ப்ரா (ஈச்மென் மனைவி) வும் குழந்தைகளும் காணப்படவில்லை. இருந்தும், அந்த யூத ஒற்றரை, அங்கேயேயிருக்கும்படி இஸ்ரேல் அரசு கட்டளையிட்டது! என்றாவது ஒருநாள் திரும்பி வருவார்கள், அப்போது விபரம் தெரிந்து கொள்ளலாம் என்கிற ஆசையில்!!

மேற்கு ஜெர்மனியிலிருக்கிறான் என்று ஒருதகவல் வரும், உடனே இஸ்ரேல் அரசு அங்கே ஒற்றர்களை அனுப்பும் — சிரியாவில் சென்ற சில நாட்களுக்கு முன் பார்த்தேன் என்றொரு சேதி கிடைக்கும். உடனே யூத இரகசிய இலாகா ஆட்களை அனுப்பும் —எகிப்து, துருக்கி, ஸ்பெயின் இப்படி ஒவ்வொரு நாடாக இஸ்ரேல் வலை போட்டு, ஈச்மேனைப் பிடிக்க முயன்றது. ஒவ்வொரு முயற்சியிலும், "தோல்வி" தான் கண்டனர், யூதர்கள். ஈச்மென், இந்த நாடுகளையெல்லாம் கடந்து, ஸ்பெயின் ஆதரவில் வெளியேறினான் அர்ஜன்டைனாவுக்கு என்றும் ஒரு கூற்று உண்டு. ஸ்பெயினின் சர்வாதிகாரி பிராங்கோ, அந்த உதவியைச் செய்திருக்கக் கூடும் என்று நம்புகிறவர்களும் உண்டு. அப்படிப்பட்ட யாராவது ஒரு பெரிய நபரின் உதவியில்லாமல், ஈச்மென், ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பால், கடலை கடந்து, எப்படிப் போயிருக்கமுடியும், போனஸ் அயருக்கு?

ஜெர்மானிய மாஜித் தலைவர்களில் பலர். அர்ஜன்டைனாவிலிருக்கிறார்கள் என்பது உலகம் பூராவும் தெரியவே, யூத அரசும், தன் வேவுக் காரர்களை அங்கே அனுப்பி, சலித்துப்பார்க்கும் முயற்சிகளை எடுத்துக் கொள்ளலாயிற்று. அப்படிப்பட்ட வேவு ஆள் ஒருவர் 1957-ல் ஈச்மென்னை அடையாளம் கண்டு பிடித்துவிட்டார்! அவர் போய், அவனைப் பிடிப்பதற்குள், ஈச்மேன் மின்னலென மறைந்துவிட்டான்! உடனே யூத அரசு மேலும், இருபது திறமைசாலிகளான துப்பறியும் நிபுணர்களை அனுப்பியது— போனஸ் அயர்ஸ் முழுதும், அவர்கள். தேடுதேடென்று, மூன்று மாத காலம் விடாமுயற்சியுடன் தேடினர்—எனினும், அவன் கிடைக்கவில்லை!!

1958-ல் மேற்கு ஜெர்மனி, நாஜித்தலைவர்களைப் பிடிப்பதில் தன்னாலான உதவிகளைச் செய்வதாகச் சொல்லி, லட்விக்ஸ்பர்க் எனுமிடத்தில் அதற்கென ஒரு காரியாலயத்தையும் ஏற்படுத்தியது. ஈச்மென் பற்றிய தகவல்கள் எது கிடைத்தாலும் தருவதாக மேற்கு ஜெர்மனி, இஸ்ரேலுக்கு அறிவித்தது. 1959-ல் இஸ்ரேல் பொறுக்கியெடுத்த சில திறமைசாலிகளை, மேற்கு ஜெர்மனிக்கு அனுப்பியது! அப்படிச் சென்றவர்கள் ஏற்கனவே அங்கேரியில் வாழ்ந்தவர்களாகும்.

(அங்கேரியில் மட்டும் ஈச்மென் நாலரை லட்சம் பேரை வரிசைவரிசையாக 'நச்சு வாயு அறை'க்குள், போட்டுக் கொன்றிருக்கிறான்! 'நச்சு வாயு அறை' என்பதற்குள், ஆட்களைக் கூட்டம் கூட்டமாக விடுவது, இயந்திர மூலம் அந்த அறைக்குள் நச்சுக் காற்றை அனுப்ப வேண்டியது. யூதர்கள், சிக்கித்திண்டாடி ஈசல் பூச்சிகளைப் போல் சாக வேண்டியது. அப்பா, என்ன கோரம்!)

இப்படிச் சென்றவர்களில் "சாண்டார்பெகடே" எனும் புனைப் பெயர் கொண்டவனும் ஒருவன். இவனுடைய தாய் தந்தை, அண்ணன் தம்பிகள், சகோதரிகள் அனைவரும் கொல்லப்பட்டதைக் கண்டவன், இவன். "ஏய்! ஈச்மென். பழிக்குப் பழிவாங்காமல் நான் விடமாட்டேன்" என்று, ஈச்மென்னிடமிருந்து தப்பி, இதே இலட்சியமாக அலைந்தவன்,இவன் இவனைப் போலப்பலர், வெறி கொண்டவர்களாக, இருந்திருக்கிறார்கள் ஈச்மென்னைப்பிடிக்க!! மேற்கு ஜெர்மனியில், இன்னும் போனஸ் அயர்சிலேயே ஈச்மென் இருக்கிறான், என்கிற செய்தி அறைகுறையாக எட்டியது. சாண்டோர்பேகடேயும் லாஜோச் மோல் நார் என்கிற இன்னொரு 'வீர சபதம் எடுத்த வேங்கையும்' மேலும் நால்வரும், ஒரு பெண்ணுமாக, அர்ஜண்டைனாவுக்குப் பறந்தனர்! 55 வயதுள்ள மோல்நாருக்கு, ஈச்மென்னை நன்றாகத் தெரியும். பலதடவைகள் பார்த்தவர் அவர். பேகடேயையும் மோல்நாரையும் பார்க்கிறவர்கள் யூதர்கள் என்று சொல்லமாட்டார்கள்! ரஷியப் பிடிப்பிலிருக்கும் அங்கேரியாவிலிருந்து தப்பிய நாஜிகள் என்று தங்களைச் சொல்லிக் கொண்டு, அர்ஜன்டைனாவில், காலனி காலனியாகத் தங்கியிருந்த நாஜிகளின் பக்கம் உலவலாயினர்- பல நாஜிகளின் நண்பர்களுமாயினர் — எவ்வளவோ செய்திகளை ஒவ்வொரு வரும் சொன்னாலும் ஈச்மென்னைப்பற்றிய செய்தியை மட்டும் ஒரு நாஜி கூட மூச்சுவிடவில்லை. மாதங்கள் ஓடின. 1960 ஜனவரியில், ஒரு விருந்தில், ஒரே ஒரு வாக்கியத்தின் மூலம் மோல் நாருக்கு ஒரு நம்பிக்கை ஒளி தெரிந்தது. அந்த விருந்தில், ஒருநாஜி, மிகவும் வேதனையுடன் இனனொருத்தினிடம் ஈச்மென்னுக்காகப் பரிதாபப்பட்டு "பாவம்! எப்படி வாழ்ந்த ஈச்மென் எப்படியெப்படிக் கஷ்டப்படுகிறார் கார் ரிப்பேரராகயிருந்துகொண்டு என்னென்ன கஷ்டப்படுகிறார். தெரியுமா!" என்று சொல்லிக் கொண்டிருந்திருக்கிறான். இந்த ஒரு வார்த்தை போதாதா!!

(அடுத்த இதழில்)

# தமிழரும் ஆந்திரரும்

## 6

தமிழறிஞர் மு. இராகவையங்கார் ஏறத்தாழ இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் தமிழர் ஆந்திரர் உறவு பற்றியும், அவர்தம் மொழிகள் பற்றியும் ஆற்றிய பேச்சின் 6-ம் பகுதி இங்கு தரப்படுகிறது. திராவிட நாடு எங்கிருக்கிறது, என்று ஏதும் தெரியாதவர்போல் கேட்போர் படித்துத் தெளியவும், கழகத்தோழர்கள் பயன் பெறவும் இந்த ஆராய்ச்சிக் கட்டுரைத்தொடர் பயன்படும்.

நீம் ஆசுகவித் திறமையை இங்ஙனம் அரசற்கறிவித்த காளமேகத்தின் தற்புகழ்ச்சியில் நம்பிக்கைக் கொள்ளாது அவ்வுண்மையையறியத் திருமலைராயர் பல வருத்தும் வழிகளாலுஞ் சோதிக்கலாயினர். அங்ஙனம் சோதித்தறிந்ததைக் குறிக்கும் செய்யுட்கள் தனிப் பாக்களாக வழங்குதலைப் பலரும் அறிவர். இச்சோதனைக்கெல்லாம் அப்புலவர் அஞ்சாது நின்று தம் பெருங் கவித் திறமையைக் காட்டவே அரசன் வியப்பும் உவப்பும் அடைந்து அவர்க்கு வேண்டிய வரிசைகளையும் கௌரவங்களையும் அளித்துச் சிறப்பித்தான். இங்ஙனம் திருமலைராசரால் வறுமை நீங்கி தாம் பெருமை பெற்றதை அடியில் வருமாறு அப்புலவர் அழகுறப் பாடுகின்றார்:—

“இந்திரன் கலையா யென்மகுங் கிருந்தான்
அக்கினி யுதரம்விட் டகலான்
எமனெனைக் கருதா னரனெனக் —கருதி
நிருதிவந் தென்னையென் செய் —வான்
அந்தமாம் வருண னிருகண்விட் —டகலான்
அகத்துறு மக்களும் யானும்
அனிலம தாகு மமுதினைக் —கொள்வோம்
ஆரெனை யுலகினி லொப்பார்
சந்தத மிந்த வரிசையே பெற்றுத்
தரித்திர ராசனை வணங்கித்
தலைசெயு மென்னை நிலைசெய்கல் —யாணிச்
சாளுவத் திருமலை ராயன்
மந்தர புயனுங் கோப்பய னுதவு
மகிபதி விதரண ராமன்
ராக்கினற் குபேர னக்கின —னவனே
மாசிலீ சானனு வானே”

உடுத்த ஆடை பல துளைக் கண்கள் உடையதென்பார் ‘இந்திரன் கலையாயிருந்தான்’ என்றும், பசி வயிற்றைவிட்டு நீங்கிற்றில்லை என்பாக ‘அக்கினி உதரம் விட்டகலான்’ என்றும், சிவனது பிக்ஷாடன ரூபத்தைக் கொண்டு திரியும் என்பால்வர யமன் அஞ்சினன் என்பார் ‘எமனெனைக் கருதான் அரனெனக் கருதி’ என்றும், அவ் யமனே இந்நிலையானபோது, பிறர் செய்யக் கூடியது ஒன்றுமில்லை என்பார் ‘நிருதிவந் தென்னையென் செய்வான்’ என்றும், வறுமைத் துயரால் உண்டாம் அழுகை நீர் கண்களைவிட்டு நீங்கிற்றில்லை என்பார் ,வருண னிருகண் விட் டகலான் என்றும், வாயுவே தன் குடும்பத்திற்கு உணவாயுள்ளது என்பார். ‘அநிலமதாகு மமுதினைக் கொள்வோம்’ என்றும், இங்ஙனம் திக்குப்பாலகரில் அறுவர் தன்வசமாயிருத்தலால் ‘ஆரெனையுலகினி லொப்பார்’ என்றும், முடிவில் இவ்வருத்தங்கள் நீங்கத் தம்மைக் குபேரசம்பத்தில் வைத்தவன் திருமலைராயனானதால் தாமே குபேரனென்றும், அவனே ஈசனாகிய சிவபெருமானென்றும் கூறினார்.

“இயலிசை தெரிந்த திருமலை ராயன்” என்று புலவர் பாடுதலால், அத்தலைவர் தமிழறிவுனுஞ் சிறந்தவராயிருந்தமை பெறப்படும். மேற்குறித்த பாடலினின்று சாளுவ வமிசத்துக் கோப்பயன் என்பவரின் புத்திரர் திருமலைராயர் என்பது தெரியலாம். சீரெங்கத்தின் சகாப்தம் 1385-ல் அமைந்த சாஸனமொன்று இத்தலைவரைப் பற்றிக் கூறுகின்றது. இவ்வாறே திருவானைக்காக் கோயிலின் தெற்குத் திருமதிலில் உள்ள சாஸனமொன்றும், கோபராஜன் குமாரரான சாளுவத் திருமலைராசர் சகாப்தம் 137-ல் சீமுக ஞூ ஜம்புகேசுவரர்க்குத் திருவாபரணமொன்று அளித்ததாகக் குறிக்கின்றது. அக்காலத்துக்குச் சரியான கிருஸ்தவாப்தம் 1453—ஆகும். இவற்றால் காளமேகப் புலவர் 15-ம் நூற்றாண்டின் மத்தியில் வாழ்ந்லவரென்பது தெளிவாதல் காண்க. இவர் பாடிய செய்யுளிற் கண்ட கல்யாணி என்பது சாளுவவரசரது பூர்வ குடிப் பெயராகும் விதரண ராமன் என்பது அவரது பட்டப் பெயருமாகும் என்பர். இங்ஙனம் தம்மைப் பெரிதும் ஆதரித்த அரசனுடைய ஊரை மண்மாரியால் அழியும்படி இப்புலவர் பாடினரென்று பிற்காலத்தார் எழுதிப் போந்த கதை உண்மையுடையதென்று சொல்வதற்கில்லை.

இனி இக்காலத்துக்குப் பின்பும் ஆந்திரவரசர்கள் தமிழ்ப் புலவர்களை நேரே அபிமானித்த செய்தி தெரியவருகின்றது. விஜயநகர வேந்தர்களிலே கிருஷ்ணதேவ ராயர் என்பவரே (1509-1529) மிகப் பிரபலராக விளங்கியவர், இவர் காலத்தில் விஜயநகர—ஏகாதிபத்தியம், ஆந்திர கன்னட தேசங்களையும் தமிழகத்தையுந் தன்னுட் கொண்டதாயிருந்தது. இவ்வரசர் அறிவு திரு ஆற்றல் என்ற மூவகைச் சம்பத்தும் நிரம்பினவர். தாமே பெரிய கவியாய்க் கவிசிரேஷ்டர் பலரையும் ஆதரித்தவர். கோயில்களும் குளங்களும் இவர் காலத்துப் பேணப்பட்டும் பெருகியும் வந்ததுபோலவேறெக் காலத்தும் நிகழவில்லை. மற்றும் இவரது அருமை பெருமைகளையெல்லாம் எடுத்து மொழிவதாயின் மிகவிரியும். ஆயினும், சந்தர்ப்பத்துக்குப் பொருந்த ஒன்றை மட்டும் இங்கெடுத்துக் கூறல் தகும். அஃதாவது இவர் தமிழ்ப் பெரும் புலவர்களையும் அபிமானித்துப் ஆதரித்து வந்தமையேயாம். இதற்குச் சில சான்றுகள் கூறுவோம்.

ஒட்டர தேசத்தைக் கடக நகரில் இருந்தாண்ட கசபதியரசனாகிய பிரதபருத்திரன் (1497-1540) என்பவன் தமக்கு அடங்காதிருந்ததனால், கிருஷ்ணதேவர் உத்தேசம் 1515-ல் அவனாட்டின்மேற் படையெடுத்துச் சென்று அவனை வென்றதோடு, அவ்வரசன் மகளாகிய துக்கா என்ற பெண் மணியை மணம்புரிந்து கொண்டனர் என்பது அவ்விராயரது பிரசித்த சரித்திரங்களுள் ஒன்று. இது நிகழ்ந்த காலத்தே அவ்வரசர் ட்ரானுடனிருந்த தமிழ்ப் புலவர் குமார சரசுவதி என்பார். இவர் திருமணத்தைச் சிறப்பித்துப் பாடிய வெண்பாவொன்று தமிழ் நாவலர் சரிதையுள் தொகுக்கப்பட்டுள்ளது. அது வருமாறு:—

“கலிங்க மிழந்துநுதிக் கைச் —சங்கந் தோற்று
மெலிந்துகட கந்நழுவ விட் —டாள்—மலிந்தமலர்ப்
பொன்னிட்ட மாணக்ருஷ்ண —பூபாலா வுன்றனக்குப்
பின்னிட்ட வொட்டியன்போற் —பெண்”

என்பது. இதனுள் ‘உனக்குத் தோல்வியுற்ற ஒட்டரத் தேசத்தரசனைப் போலவே, அவன் பெண்ணும். கலிங்கம் நுதிக்கைச் சங்கம் கடகமென்னும் இவற்றை உன் முன் நெகிழவிட்டாள்’ என்று சிலேடை நயம் பெறக் கூறப்பட்டுள்ளமை தெரியலாம். ‘ஒட்டியன் கலிங்க தேசத்தையும் துதிக்கையுடைய யானைக் கூட்டத்தையும் கடகம் என்ற தலை நகரையும் போரில் இழந்தோடினன்: அங்ஙனம் இழக்கும்படி செய்த உன் பிரதாபத்தை அறிந்த அவன் மகளும், வீரனான உன்னையடைய விரும்பியதனால் உண்டான தன் உடல்மெலிவால் தானும் கலிங்கத்தையும் (—வஸ்திரத்தையும்), நுதிக்கைச் சங்கத்தையும் (—முன்கையிலணிந்த வளைகளையும்), கடகத்தையும் (—தோள் வளையையும்) நழுவ விடலானாள்’ என்று கவி சொல்லணி பெறக் கூறும் அழகு அறிந்து மகிழத் தக்கதாம். இதனால் விஜயநகர வேந்தரின் ஆஸ்தானத்தில் பெருந் தமிழ்ப் புலவர்களும் எப்போதும இருந்து வந்தனர் என்பதும் அவர்கள் சமயோசிதமாகப் பாடுவதை அரசன் கேட்டு உவந்து சிறப்பித்தானென்பதும் விளங்குகின்றன. இக்குமார சரசுவதி போலவே, கிருஷ்ணதேவராயரால் அபிமானித்துக் கௌரவிக்கப் பட்ட தமிழ்ப் புலவர்கள் பலர். தமிழ்ப் பிரபலமாக வழங்கும் சூடாமணி நிகண்டின் ஆசிரியரான மண்டல புருடர் என்ற சைன சமயப் புலவர் இவ்வரசர் பெருமானால் ஆதரிக்கப் பெற்றவருள் ஒருவர். இவர் தம் நூற்கண்ணே ‘கொடைமடம்’ என்ற சொற்குப் பொருள் கூறும்போது,

“படைமயக் குற்ற போதும்
—படைமட மொன்றி லாதான்
மடைசெறி கடகத் தோளான்
—மதிக்குடை மன்னர் மன்னன்
கெடிமன்னர் வணங்குந்
—தாளான் கிருட்டிண ராயன் கைபோற்
கொடைமட மென்ப தம்ம
—வரையாது கொடுத்த லாமே”

என்று, வரையாது யாவர்க்கும் கிருஷ்ணராயர் வழங்குவதுபோல கொடுப்பதே, அத்தொடர் மொழியின் பொருள் என்கின்றார். இவ்வாறு பாடுதல், அவ்வேந்தரது கொடைப் பெருமையை அவரே நேரில் அறிந்தனுபவித்தவர் என்பதற்குத் தக்க சான்றாமன்றோ? மண்டலவர் புகழ்ந்தஇக் கிருஷ்ணராயரை இரட்ட வேந்தனான அமோக வர்ஷன் கிருஷ்ணன் என்று சிலர் கருதி யெழுதியது பொருந்ததாம். இனி, இவ்வரசர் பெருந்தகைமேல் வேளாண் மரபினரின் குருவாகக் கச்சியம்பதியில் விளங்கிய ஞானப்பிரகாசர் என்ற பெரியாரொருவர், ‘மஞ்சரிப்பா’ என்ற பிரபந்தம் பாடியிருந்தார் என்ற செய்தி—

“வானப்ர காசப் புகழ்க்கிருட்
—டிண ராயர்க்கு மஞ்சரிப்பா
கானப்ர காச புகழாய்ந்துக்
—கச்சிக் கலம்பகஞ்செய்
ஞானப்ர காச குருராயன்
—வாழ்ந்து நலஞ்சிறந்த
மானப்ர காச முடையோர்
—வளர்தொண்டை மண்டலமே”

என்னுந் தொண்டை மண்டலச் சதகச் செய்யுளால் வெளியாகின்றது. இப்பிரபந்தம் இப்போது கிடைத்திலது. இதுவன்றி தேவாலயங்கள் போன்ற தர்ம ஸ்தாபனங்களில் அதிக்கிரமங்கள் நடந்தால், அவற்றைத் தமிழ்ப் பெரியோர்களும் புலவர்களும் தம்மரசரான கிருஷ்ணதேவர்க்குச் செய்யுள் மூலமாக அறிவித்து வந்திருக்கின்றனர்.

(—தொடரும்)

(8-ம் பக்கம் தொடர்ச்சி)

"ஒரு பெண்ணை அடிக்க உங்களுக்கு வெட்கமாக இல்லை?'' எனக் கூறிவிட்டு. விருப்பம் போல் எது வேண்டு மானாலும் செய்யுங்கள் என்று கைகளைக் கட்டிக்கொண்டு அவள் முன்னால் நின்று கொண்டாள்.

"நிச்சயமாக உனக்கு தெரிந்துதான் ஆகவேண்டுமா?''

"ஆம். எனக்குத் தெரிந்துதான் ஆகவேண்டும்'' மீண்டும் அடிக்க கைகளை ஓங்கினான். ஆனால் கதவை யாரோ தட்டும் ஓசை கேட்டது. அவளுடைய மாமியார் நின்று கொண்டிருந்தார். வியர்வை கொட்ட அவன் வெளியேறினான்.

"ஏண்டா கோபி. என்னடா சத்தம் போட்டுக் கொண்டிருந்தே?'' மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க அந்த கேள்விக்கு சரோஜினிதான் பதிலளித்தாள்.

"ஒண்ணுமில்லேம்மா. ஒரு சின்ன விஷயத்தைப் பத்தி, தமாஷாகப் பேசிக்கிட்டிருந்தோம்''

தாயின் தோளில் சாய்ந்தவாறு கடந்த நிகழ்ச்சிகளில் வயப்பட்டுக் கொண்டிருந்த, சரோ, தீடீரென விழித்துக் கொண்டாள். பிறகு தாயிடம் கூறினாள்.

"அம்மா நான் இனி அந்த வீட்டுக்குப் போகப்போவதில்லை''

"ஏம்மா?''

தாய் திடுக்கிட்டுக் கேட்டாள்.

அவர் இன்னொருத்தியை மனைவியாகவைத்திருக்கிறாராம்'அம்மா அவருக்கு நான் அங்கிருப்பது பிடிக்கவே இல்லை...''

"மகளே உன்னை அந்த துரோகி ஏமாற்றி விட்டானே!'' அந்த தாய் கோபக்குன்றாக மாறினாள். தொடர்ந்து ஒலித்துக் கொண்டிருந்த வசைமொழிகளை கேட்காமலிருக்க அவள் காதுகளை பொத்திக் கொண்டாள். அவளுடைய தாய் ஒரு குழந்தையைப்போன்று விக்கி விக்கி அழுதாள். அவளும் அழுதாள்.

மறுநாள் பத்து மணிக்கு அவளுடைய வேலையாள் டாக்சியில் வந்து இறங்கினான். வாசலில் அப்பாவுடன் அவன் எதையோ விவாதித்துக் கொண்டிருந்தான். அவள் ஜன்னலுக்கருகில் வந்து நின்று ஒட்டுக் கேட்டாள்.

அவளுடைய தந்தை கோபத்துடன் இரைந்து கொண்டிருந்தார். 'அவன் சாகட்டும் அல்லது பிழைக்கட்டும். எக்கேடுகெட்டுப் போகட்டும். எங்களுக்கு அது பற்றிக் கவலையில்லை. என் மகளை அடித்து விரட்டிய மாபாதகனல்லவா அவன்''

'நீங்கள் இந்த முடிவுக்கு வரக் கூடாது. நல்லவராகட்டும். அல்லது கெட்டவராகட்டும். இப்பொழுது அவர் சாவுடன போராடிக் கொண்டிருக்கிறார்...நான் சொல்ல வேண்டியதைச்சொல்லி விட்டேன். இனி உங்கள் விருப்பம்...'

வேலையாள் கூறினான்.. அதைக் கேட்ட சரோஜினி. நடுங்கவில்லை. அழவில்லை... தந்தை உள்ளுக்குச் சென்று தாயுடன் எதையோ மென் குரலில் பேசிக்கொண்டிருந்தார். எல்லாம் புரிந்து கொண்டவளைப் போல சரோஜினி அங்கு சென்று தந்தையிடம் ஒரு வெடி குண்டைத் தூக்கிப்போட்டாள்.

'அப்பா நாம் இப்பொழுதே அவரைப் பார்க்கச் செல்லவேண்டும், உடனே புறப்படத் தயாராகுங்கள்'

அவளுடைய முடிவு அந்த பெற்றவர்களை வியப்பில் மூழ்கடித்தது.

அமைதி குடியிருக்கும் மருத்துவ மனை காம்பவுண்டிற்குள் நுழையும்போதே அவள் ஒரு தீர்மானத்துக்கு வந்தாள். அவனைக் கண்டதும் அழுவதோ, துக்கம் காட்டிக் கொள்வதோ கூடாதென்று. ஆனால், மேற்குப் புறத்திலுள்ள அந்தத் தனியறையில் குழி விழுந்து மூடிய கண்களும், ஒட்டிய கன்னங்களும், மொட்டையடித்த தலையும், சிவப்பு கம்பளிப் போர்வைக்குள் துடித்துக்கொண்டிருக்கும் எலும்புக் கூடாக, அழகு மமதை கொண்ட அவளுடைய கணவனைக் கண்ட பொழுது, அவளையும் அறியாமல் ஒரு ஏக்கப் பெருமூச்சு அவள் இதயத்தின் அடித்தளத்திலிருந்து எழுந்தது, மறுநிமிடம் அவள் கண்கள் குளமாயின. கைக்குட்டையால் வாயைப் பொத்திக் கொண்டு பீறிடும் துக்கத்தை அணைகட்டி நிறுத்தினாள்.

"அழகு போதையில் மமதை கொண்டு அகந்தையாட்டம் போடுவோர்களே! இதோ இந்த கட்டிலைப் பாருங்கள். சொடுக்கு நேரத்தில் அழகு இங்கே அழிக்கப்படுகிறது,' என்று உலகத்தை நோக்கி உறக்கக்கூற வேண்டும் போலிருந்தது அவளுக்கு.

மறுநாள் ஊருக்குப் புறப்படத் தயாரான பெற்றோர்களிடத்தில் அவள் கூறினாள்.

"நான் வரலையம்மா! அவர் குணமடைந்தபின் வருகிறேன்''

அப்பாவும் அம்மாவும் ஒருவரை யொருவர் பார்த்துக்கொண்டனர். அவள் தனக்குள் கூறிக் கொண்டாள்.

சாவு அடிக்கடி கதவருகே எட்டிப்பார்த்தது தட்டிப் பார்த்தது. கடைசியாக...

ஒருநாள் பிரக்ஞை திரும்பியது கண்கள் திறந்ததும் அவன் முதலில் அவளைத்தான் கண்டான். அடுத்த கணம் அவன் கண்கள் குளமாயின. சிறிது நேரம் அவளையே உற்றுப் பார்த்தான். பிறகு தலையை ஒருபக்கமாகத் திருப்பிக் கொண்டான். கண்ணீர் அவனுடைய கன்னங்கள் வழியாக வழிந்தோடியது. அவள் ஒன்றும் பேசவில்லை அவளுடைய மார்பில் சாய்ந்து கொண்டு மருந்து குடிக்கும் போதும், மற்றும் அவளுடைய அன்புப் பணிவிடைகளை ஏற்கும் போதெல்லாம், நீர் நிறைந்த கண்களுடன் அவன் அவளையே பார்த்துக் கொண்டிருப்பான்.

இந்த நிலையிலும், தேவைப் படும்போது மட்டும் அவள் பேசினாள். அதிகமாகப் பேச்சுக் கொடுத்தால், அவனுடன் அன்பு நெருக்கமாகி விடுமோ என்று அவள் அஞ்சினாள். அவளால் அவனை நேசிக்க முடியவில்லை.

அவள் வரண்டாவிற்குச் சென்று, ஒரு கம்பத்தில் சாய்ந்தவாறு, தன்னுடைய துர்விதியை நினைத்து வெகுநேரம் அழுதாள்.

"எதற்காக வெறுமனே அழுகிறீர்கள்! அவருக்கு சீக்கிரம் குணமாகிவிடும். அழுது அழுது உங்கள் உடலைக் கெடுத்துக் கொள்ளாதீர்கள்'

அவள் அந்த வயது முதிர்ந்த நர்சை நோக்கினாள். நீராவி வற்றி விட்ட வெண் மேகங்களுக்கு, வரட்சி மிகுந்த பூமியின் தாகத்தைப் பற்றி என்ன தெரியும்.

உள்ளேயிருந்து அவன் அழைப்பதைப் போலிருந்தது. அவனுடைய மெலிந்த கைகள் பிரயாசையுடன் எழுந்து அவனுடைய பக்கத்தில் அமருவதற்கு சாடை காட்டின. ஒருவேளை நர்ஸ் கூறியதை அவன் கேட்டிருக்கலாம். அவள் உட்கார்ந்து கொண்டு கடைக்கண்ணால் அவனை நோக்கியது அவன் கண்கள் எதையோ கெஞ்சிக் கொண்டிருந்தன. அவள் பேசவில்லை. அவனுடைய களைத்துப் போன குரலில் துண்டு துண்டாக வார்த்தைகள் தெறித்தன.

'சரோ நான் உன்னைத் துன்பப்படுத்தியிருக்கிறேன். அதற்காக இப்பொழுது மன்னிப்புக் கேட்கிறேன்...ஆனால் இப்பொழுதுகூட உனக்கு என்னால் துன்பம்தான் மிஞ்சுகிறது... சரோ என்னை மன்னிக்கமாட்டாயா?...''

அவள் இடைமறித்துக் கூறினாள்.

'அது என்னுடைய கடமை'

அவளுடைய குரலில் நடுக்கம் குடிகொண்டிருந்தது.


'நியூ ஜஸ்டிஸ்'

--ஆங்கில வார இதழ்--

...ஃ...

கோவை, குடந்தை, தஞ்சை, வேலூர் மற்றும் ஏஜண்டுகள் இல்லாத ஊர்களில் நல்ல விற்பனையாளர்கள் தேவை.

விபரங்களுக்கு,

1. எஸ். பி. கோயில் தெரு, சென்னை-26


## வருந்துகிறோம்

"நம்நாடு'' பொறுப்பாசிரியர் அண்ணன் காஞ்சி. கலியாணசுந்தரம் அவர்களின் அருமை அன்னையார் இறந்த செய்தி அறிந்து மிகமிக வருந்துகிறோம். உலகை அறிந்த அண்ணனின் சோகத்தில் பங்கு கொள்வது தவிர, வேறென்ன ஆறுதல் கூற முடியும்!!

—ஆசிரியர்.

'சரோ நான் உண்மையாக உன்னை நேசிக்கிறேன். நீ மட்டும் என்னை மன்னித்து விட்டேன் என்று கூறினால் என் உச்சி குளிர்ந்துவிடும்''

அவள் கணவனை ஏறிட்டு நோக்கினாள். மன்னிப்பாம் மன்னிப்பு ... எவ்வளவு சீக்கிரம் அதைச் சொல்லி விட்டார்—எவ்வளவு சீக்கிரம்.

அவள் எழுந்து கம்பிகளில் உதடுகளை அழுத்தியவாறு வெளியே நோக்கினாள்.

பறவைகள் ஜோடிப் போட்டுக் கொண்டு கூட்ட கூட்டமாக கூடணையப் பறந்துகொண்டிருந்தன.

சரோ ஒரு பெருமூச்சுவிட்டாள். கண்களைத் துடைத்துக்கொண்டு ஒரு சிரிப்பை வரவழைத்துக் கூறினாள். 'முதலில் நோய் குணமாகட்டும். பிறகு மற்றவைகளைக் சாவகாசமாகப் பேசலாம்.''

ஒவ்வொரு நாளும் அவன் கூடுதல் கூடுதலாக அவளிடம் நெருங்க ஆரம்பித்தான். ஆனால், அவள் அவனிடமிருந்து விலகிக் கொண்டேயிருந்தாள்.

டாக்டர் புன்முறுவலுடன் கோபியைப் பார்த்துக் கூறினார்: 'மிஸ்டர் கோபி, நீங்கள் பிழைத்துக் கொள்வீர்களென்று நாங்கள் நினைக்கவேயில்லை. கடைசிவரை எங்களுக்கு நம்பிக்கையில்லாமல் இருந்தது.'

கோபி டாக்டருக்கு நன்றி செலுத்தினான்.

டாக்டர், சரோஜினியைச் சுட்டிக்காட்டிக் கூறினார், 'நன்றி செலுத்தவேண்டியது எனக்கல்ல கோபி, அதோ: உங்கள் மனைவிக்குத்தான்.'

கோபி மனைவியை ஏறிட்டுப் பார்த்தான். அவள் தலை கவிழ்ந்தாள்.

கோபி தன் மாமனாரைப்பார்த்துக் கூறினான்

'நான் பல தவறுகள் செய்திருக்கிறேன். அவற்றையெல்லாம் மன்னித்துவிட்டு சரோவை என்னிடம் அனுப்பவேண்டும்.'

அவளுடைய தகப்பன் பதில் கூறவில்லை. அவருடைய கண்களில் நீர் சுரந்தது. தாயின் முகத்தில் பறிபோன அமைதி மீண்டும் குடியேறியது. தந்தை, தாயையும்—தாய் மகளையும் நோக்கினாள். கடைசியாக தந்தை கூறினார்:

'எனக்கு யாரிடமும் விரோதம் கிடையாது. சரோவின் விருப்பம் எப்படியோ, அப்படியே எங்கள் விருப்பமும். அவள் விருப்பத்திற்கு எதிராக நாங்கள் என்

(தொடர்ச்சி 12-ம் பக்கம்)


# கேள்வி பதில்

கே: புதுக்கட்சிக்கு 'சிவாஜி' பணம் கொடுத்தார் என்று உலவும் வதந்தி உண்மையா?

சேதுமாதவன்.
உறையூர்-திருச்சி

ப: இல்லை! சிவாஜி கணேசு, மிகவும் புத்திசாலி. அரசியல் சுழல்களில் சிக்கியிருப்பதாக அவர் பெயர் அடிபடுமே ஒழிய அவர் 'எல்லோருக்கும் நல்ல பிள்ளை'யாக இருக்கவே ஆசைப்படுவார். எந்தத் 'தினத்தந்தி' அவர்மீது நம் தோழர்களுக்கு அதிருப்தி வருமளவுக்குத் திருவிளையாடல்களைச் செய்ததோ, அதே தினத்தந்திதான் இதையும் பெரிதாக்குகிறது. நம்மவர்களுக்கு இதைக் கேட்டால் எரிச்சல் வரும். ஏதாவது பேசுவார்கள். உடனே கணேசுவிடம் காட்டி, 'இந்தத் தி. மு. கக்களைப் பார்த்தீர்களா? அவர்கள் என்ன சொல்வது! நீங்கள் எதுவும் கொடுக்காத போதே இப்படிச் சொல்லும் அவர்களுக்குப் பாடம் போதிப்பதுபோல, ஏதாவது கொடுங்கள்' என்று தூண்டிவிடுவது, அதைப் பிறகு போடுவது, இப்படி எதையாவது செய்யும்! 'எச்சில் பொறுக்கி' வேலையைச் செய்யும் அந்த ஏட்டின் கூற்றை நம்பி, எந்த முடிவுக்கும் வந்துவிடாதீர்கள். பணத்தை எந்த் காரியத்துக்கு எப்படி பயன் படுத்த வேண்டும் என்பதில், சிவாஜி, மிகவும் கெட்டிக்கார ஆள்! சம்பத்தைப் பற்றியும் அவர்கூட இருப்பவர்களைப் பற்றியும் கணேசுக்கு, மிக நன்றுகத் தெரியும். கட்சியின் பெயரைச் சொல்லி, அவரிடம் 'காலணு' வாங்க முடியாது! ஆனால், சம்பத் குழாம் 'கணேசு காசு கொடுத்தால் கையேந்தி வாங்குவோம்' என்று சென்னைக் கூட்டங்களில் பேசுகிருர்கள் அவர்கள் சொல்லித்தான், தினத்தந்தியும் இந்த விஷயத்தைப் பெரிது படுத்துகிறது நாமும் இதைப் பெரிதுபடுத்துவது, நல்லதுமல்ல—தேவையுமல்ல!!

—:o:—



ELEGANT

(11-ம் பக்க தொடர்ச்சி)

றைக்குமே நிற்கமாட்டோம்''

சரோவின் வாயிலிருந்து வெளியாகும் வார்த்தைக்காக பல ஜோடிக் கண்கள் அவளை வட்டமிட்டன.

அவள் வைராக்கியமாகக்கூறினாள். நான் மீண்டும் உங்களுடன் வரவிரும்பவில்லை'

ஒருநிமிடம் பலத்த அமைதி நிலவியது. அவன் கெஞ்சும் தோரணையில் தழுதழுத்த குரலில் கூறினான்:

'நான் ஏற்கனவே உன்னிடம் மன்னிப்புக் கோரியிருக்கிறேன்.

அவளுக்கு இப்பொழுது பேச சக்தியில்லை. வார்த்தைகள் வெளிவர மறுத்தன. ஆனால், அவள் கூறவேண்டியதை யெல்லாம் கண்களிலே தேக்கியிருந்தாள்.

'அப்பா! வாருங்கள் நாம் போகலாம்'

'அப்படியானால் நீ எதற்காக எனக்கு இந்த பணிவிடைகளெல்லாம் புரிந்தாய்'' அவன் கேட்டான்.

'அது ஒரு மனைவியின் கடமை. மண்ணிற்கடியிலிருந்து தங்கத்தை எடுக்கவும், பிறகு அதை நவநவமான ஆபரணங்களாகச் செய்வதற்கும் இரும்பு எப்படிப் பயன்படுகிறதோ, அதையே இதற்கும் உவமையாக எடுத்துக் கொள்ளுங்கள். உங்கள் கூற்றுப்படி அழகிய தங்கமான உங்களுக்கு, அழகற்ற இரும்பான என்னுடைய பணிவிடைகள் மனைவி யென்ற முறையில் செய்யும் வாய்ப்புக் கிட்டியதற்கு பெருமைப்படுகிறேன்... ஆனல் இவ்வளவிற்குப் பிறகும், உங்கள் சொற்படியே, வாழ்க்கையில் நாம் இணைந்துபோக முடியாத இரும்பும், தங்கமும் என்பது மேலோங்கி நிற்கிறது. ஏற்கனவே நீங்கள் தேர்ந்தெடுத்த தங்கம், உங்களுடன் இணைந்து வாழட்டும் என்று வாழ்த்துகிறேன். இந்த இரும்பு இப்படியே திரவித்து உருத்தெரியாமல் போனாலும் மற்றொரு தங்கத்தை நாடாது என்பதையும் உறுதி கூறுகிறேன்'

அதன் பிறகு யாரும் ஒன்றும் பேசவில்லை. அவள் பெற்றோர்களுடன் ஒரு காரில் ஏறிக்கொண்டாள். கோபியும், அவனுடைய வீட்டாரும் மற்றொரு காரில் ஏறிக்கொண்டனர். மருத்துவமனையின் நுழைவாயிலைக் கடந்ததும் இரண்டு கார்களும், இரண்டு பாதைகளில் திரும்பியது. தூள் கிளப்பிப் பாயும் காரின் பின் சீட்டில் மயங்கிக்கிடந்த சரோஜினி அதுவரை நடந்த நிகழ்ச்சிகளை அடியோடு மறக்க முயற்சித்துக் கொண்டிருந்தாள்.

ஆசிரியரும், வெளியிடுபவரும்: இராம. அரங்கண்ணல், சென்னை 24.
அச்சிட்டோர் எம். பி. சத்தியமூர்த்தி முல்லை அச்சகம் 3-40 மவுண்ட்ரோடு சென்னை-6